
www.padippakam.com

# வாழைச்சேனை

## 26, 27, 28 ஜூன் 2002



எங்கள் மரணங்களையும்

துன்பங்களையும் இழப்புகளையும்

அறிவாயா?

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வாழைச்சேனை

# ஜூன் 26, 27, 28, 2002

பதிப்பாசிரியர்

**அல் - துர்ரா**

வெளியீடு:

**கல்குடா முஸ்லிம் சமூக கலர்சார மேம்பாட்டு முன்னணி**

**2002 டிசம்பர் 26**

படிப்பகம்

www.padippakam.com



## புலிகளால் கொல்லப்பட்ட
## கல்குடாத் தொகுதி முஸ்லிம் புத்திஜீவிகள்

01. ஜனாப் புகாரி (விதானை)
02. ஜனாப் ஏ.எஸ். மஹ்மூது லெப்பை (அதிபர்)
03. ஜனாப் ஆரிப் அலி (ஆசிரியர்)
04. ஜனாப் முகம்மது முத்து (தவிசாளர்)
05. ஜனாப் ஏ.கே. உதுமாலெப்பை (மேலதிக உதவி அரசாங்க அதிபர்)
06. ஜனாப் எம்.ஏ. முகைதீன் (சட்டத்தரணி)
07. ஜனாப் ஆ அகமட் (மேலதிக அரசாங்க அதிபர்)



படிப்பகம்

www.padippakam.com



# நெஞ்சு பொறுக்குதில்லையே!!

கடந்த ஜூன்
என் இதயத்தின் இறுதி நாளத்தையும்
வெட்டிவிட்டது
என் மரணத்தைப் பற்றி
கேள்விப்பட்டிருக்கிறாயா?
வெட்கப்படத்தக்க எனது இறுதிச் சடங்கு பற்றி
கேள்விப்பட்டிருக்கிறாயா?

*(1968 ஜூன் 05 என்ற, சல்மா கத்றா ஜய்யு,சியின் கவிதையிலிருந்து)*

27-06-2002 அன்று கல்குடா தொகுதி வாழ் முஸ்லிம்களும், கிழக்கு வாழ் முஸ்லிம்களுடன் இணைந்து புலிகளின் அடக்குமுறைக்கு எதிராக ஹர்த்தால் அனுஷ்டித்தனர். இத்தினத்துக்கு முதல்நாள் (26. 06. 2002) சேகு முகையதீன் என்பவரின் இரு பிள்ளைகள் ஜனுதீன் முஹம்மட் (வயது-26), யனுஸ்தீன் (வயது-20) கல்குடா- பேத்தாளை என்ற தமிழ் கிராமத்திற்கு தடாகம் (அரச சார்பற்ற) நிறுவனத்தின் இணைப்பாளர் சந்திரா என்பவரின் திருமண வீட்டுக்கு சமையல் வேலைக்குச் சென்றிருந்தனர். ஹர்த்தால் பற்றி அறிந்திராத இவர்களை பாசிஸப்புலிகள் சித்திரவதை செய்து கல்குடா-கல்மடு என்ற இடத்திலே கொன்று புதைத்திருந்தனர். இதனைக் கேள்வியுற்ற அவரின் தந்தையும், குடும்ப உறுப்பினர்களும், இராணுவம், பொலிஸ், மரண விசாரணை அதிகாரி, சட்ட வைத்திய அதிகாரி, மாவட்ட நீதவான் ஆகியோர் உட்பட சடலத்தை எடுத்து வர சென்றனர். மரண விசாரணையின் பின் சடலத்தை எடுத்து வரும்போது, விடுதலைப்புலிகள் வழிமறித்து, சடலங்களை கொண்டு வரவிடாமல் கண்முன்னே எரியும் நெருப்பில் வீசி எறிந்தனர். இதனைக் கண்ணால் கண்டு மனம் வெதும்பிய அந்த இரு பிள்ளைகளின் தந்தை எம்முடன் பேசினார்:

இதோ அவரின் வார்த்தைகள்:

"இஞ்ச வாழைச்சேனையில ஒரு கோக்கி இரிக்காரு, தமிழாக்கள்ற விஷேசங்களுக்கு அவருதான் சமைக்கப்போற. அண்டக்கி ஹர்த்தாலுக்கு ஒரு நாள் முந்தி புதன்கிழம பின்னேரம் (26-06-2002) எண்ட மகனை வந்து கூப்பிட்டாரு. உதவியாள் வரல்ல நீங்க வாங்கண்டு கூப்பிட, சும்மா நின்ட மகன் மூத்தவரு ஜனுதீன், அவரோட போனாரு. தம்பி யனுஸ்தீன் மணவற சோடிக்கிறதில திறமசாலி, அவரும் போனாரு. அப்ப வியாழக்கிழம ஹர்த்தால் பிரச்சினை முத்திட்டு, கோக்கியார்ர பொடியன் எங்கட முன் ஊட்டுல முட்ட வாங்க வந்தான். வாப்பா எங்கண்டு கேக்க, ஊட்ட இரிக்காரு என்டான். அப்ப நம்மட புள்ளையளும் வந்திருப்பாக எண்டு நான் பக்கத்துல ஆர்.டி.ஓ.வ கூட்டிக்கிட்டு போனன். அவரு அப்பதான் படுத்துக்கிடந்து வாரார். பிள்ளையள் எங்கண்டு கேட்டம். அவரயும், பிள்ளையள் ரெண்டு பேரையும் ஒரு குடிலுக்க கட்டிப் போட்டு, வளச்சி பெற்றோல் ஊத்தி பத்தவச்சயாம், இவரு பிச்சிக்கிட்டு ஓடிவந்தையாம், இவரு முந்திட்டாராம், பிள்ளயல மறுகா வந்து பிடிச்சிட்டுப்



படிப்பகம்

www.padippakam.com



போனயாம் என்டார். அப்ப பொலிஸில அவர விளக்கமெடுக்க கூட்டிப்போய் பொலிஸ்ல நிண்டா, இன்னொரு ஆள பொலிஸ் விசாரிச்சிட்டு இருந்தாங்க. நீங்க கொஞ்சம் இருங்கெண்டு சொன்னாங்க. கோக்கியாரும், நானும், ஆர்.டி.ஓ.வும் நிண்டம். இதுவரைக்கும் ஆள் இல்ல. பொறகு நம்மட கல்குடா பொலிஸார்ர முயற்சியால கல்மடு குளத்தோரத்துல புள்ளகள புதச்சி இருக்கானுகளெண்டு கேள்விப்பட்டோம்''.

''பொறகு பொலிஸ்காராக்கள்ட சொல்லி ஆமி, பொலிஸ், நீதவான் எல்லாம் வந்தாங்க. டி.எம்.ஓ. தட்சணாமூர்த்தியும் வந்து விசாரண செஞ்சி, ஆக்கள்ற பேரெல்லாம் பதிஞ்சாரு. விசாரண செய்து எல்லாம் முடிஞ்சி பொலிஸ் ட்ரக்குக்குள்ளதான் மையத்த ஏத்தி வந்தம். ஒரு நானூறு ஆமி,பொலிஸ் கூட வந்திச்சி. கல்குடாவில இருந்து பொலிஸ் ரக்குக்கு முன்னால, ஏ.எஸ்.பி. ஓபிசுக்கு நேரா வரக்குள்ள, எங்கள சுத்தி ஒரு இரண்டாயிரம் பேரு புலிகளும்,தமிழ்க்காடையர்களும் வளஞ்சாங்க. ஆயுதம் இருந்திச்சி. மையித்து இருந்த ட்றக்குக்குள்ள வந்து, ரெண்டு புலிகள் எட்டிப் பாத்தானுகள். நாங்க ட்றக்குக்குள்ள படுத்துக் கிடந்துதான் வந்தம். அதுல ஒருத்தன் கிளிப்ப கழட்டி, குண்ட வீசப் போனான். அப்ப எங்களோட இருந்த பொலிஸ்காரர் துவக்க எடுத்துக்கிட்டு பாய்ஞ்சாரு. அவனுகள் ஓடிட்டானுகள்.''

''பொறகு ஒரு புலி வந்தான். ஆமிக்காரன்ட சேட்ட பிடிச்சி உலுக்கி பொடியக் கொண்டு போரண்டா, வந்திருக்கிற எட்டுச் சோனியையும் தா, இல்லாட்டி பொடிய கொண்டு போகேலா எண்டானுகள். நாங்க எட்டுப்பேரும் எங்கட குடும்பத்தாலதான் போனம். திடீரென்று எங்கள வளச்சி ஆமி,பொலிஸ் எல்லாரையும் சுத்தி பெற்றோல் ஊத்தி நெருப்பு மூட்டினாங்க, ஆம்புளயலும், பொம்புளயலும் எரியுற நெருப்பில பெரிய கட்ட,ரயர்கள போட்டாங்க. நிலம மோசமா போச்சி. ஓ.ஐ.சி. பியசேன கேட்டாரு, இப்ப என்ன செய்யுற, செத்தவங்களுக்காக உசிரோட இருக்கிறவங்கல சாகடிக்கேலா. ஒரு முடிவச்சொல்லுங்க என்றாரு. நான் என்னத்தச் சொல்ல, தம்பி, எண்ட மத்த பிள்ளையள், மருமகன்... இவங்களையும் காப்பாத்தனும். அப்ப பொடிய குடுங்க சேர் எண்டண், என்ட நெஞ்சக் கல்லாக்கிட்டு.''

''அவனுகள், அதான் புலிகள் தம்பி, என்ட கண் முன்னால, என்ட குடும்பத்தார்களும் பாத்து நிக்க... பத்திக்கிட்டிருந்த நெருப்புல என்ட பிள்ளையள்ற மையத்த தூக்கி வீசுனானுகள் தம்பி.''

''இத இராணுவம், மில்ற்றி பொலிஸ், நீதவான் எல்லாரும் பாத்துக்கிட்டுத்தான் இருந்தாங்க, என்ட பிள்ளையள், என்ட கண்ணுக்கு முன்னால எரிஞ்சி, கருகிப்போனத பாத்தன் தம்பி.''

## முன்னறிவிப்பு இல்லாத ஹர்த்தால்-
## உணர்த்தும் விடயம் என்ன?

27-06-2002ஆந் திகதி நடைபெற்ற ஹர்த்தாலும் அதன் பின்தொடர்ந்த கசப்பான சம்பவங்களும் கல்குடா முஸ்லிம்களின் வரலாற்றில் மாறாத வடுக்களாகும். மூதூர் முஸ்லிம்கள் மீது தமிழ் பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிட்ட அநியாயங்களையும் கல்குடா முஸ்லிம்களிடம் தொடர்ந்து அச்சுறுத்தி புலிகளால் அறவிடப்படும் கப்பம் கோரலையும் கண்டித்து கல்குடா முஸ்லிம்கள் 27-06-2002 அன்று ஹர்த்தால் அனுஷ்டித்தனர். கிழக்கு மாகாணத்தின் ஏனைய முஸ்லிம் பகுதிகளிலும் இந்த ஹர்த்தால் அன்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஒரு முஸ்லிம்



படிப்பகம்

www.padippakam.com



தனக்கெதிராகவும், தனது சமூகத்திற்கெதிராகவும் எங்கு அநீதி இழைக்கப்பட்டால் எனக்கென்னவென்று அவன் கவலைகொள்ளாது இருக்கமுடியாது. வருந்துவதும், தனது வருத்தத்தை தெரிவிப்பதும் ஒரு ஈமானியப் பண்பாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ''முஸ்லிம்களின் விவகாரத்தில் அக்கறை காட்டாதவன் எம்மைச் சார்ந்தவனல்ல'' என குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் நோக்கும்போது வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தமிழ் பயங்கரவாத குழுக்களால் குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளால் கடந்த இரு தசாப்தங்களாக பல்வேறு நெருக்குதல்களுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். கல்குடாவில் வாழும் முஸ்லிம்கள் இந்த நெருக்குதல்களால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான காணிகளையும், வயல் நிலங்களையும் அவர்கள் இழந்துள்ளார்கள். பெறுமதியான பல சொத்துக்களை இழந்துள்ளதுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக நூற்றுக்கணக்கான உயிர்களையும் இழந்து ஓர் அநாதைச் சமூகமாக, அடிமைச் சமூகமாக வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இப்பிரதேச மக்கள் ஆத்திரப்படுவதும் உணர்ச்சிவசப்படுவதும் இளம் ரத்தங்கள் கொதிப்பதும் வாஸ்தவமானதுதான். தமிழ் பயங்கரவாதத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக தம்மாலான அனைத்து எதிர்ப்புக்களையும் வெளிக்காட்டும் உரிமையும் முழு நியாயமும் கல்குடா முஸ்லிம்களுக்கு நிறையவே உண்டு. ஆயினும் தமது உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தும்போது மிக நிதானத்துடனும், முன்யோசனையுடனும் வெளிப்படுத்த வேண்டும் என்பதனை அவர்கள் மறந்து விடக்கூடாது. தமது உணர்ச்சிகளை நெறிப்படுத்தி ஒரு கட்டுக்கோப்பின் கீழ் ஒரு தலைமைத்துவ வழிகாட்டலின் கீழ் கொண்டுவந்து செயற்படுவதே கூடிய பயனைத்தருவதோடு, இழப்புக்களை முடியுமான அளவு தவிர்ப்பதாகவும் அமையும். இதை விடுத்து நினைத்தவர்கள் நினைத்ததையெல்லாம் செய்ய முற்படும்போது முழுச்சமூகமும் பலிக்கடாவாக மாறும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இழப்புக்களும் எல்லை கடந்துவிடும். எமது எதிர்பார்ப்புக்களை விட ஏமாற்றங்களே மிகைத்து நிற்கும். இந்த உண்மையை வடகிழக்கு வாழ் முஸ்லிம்கள் குறிப்பாக கல்குடா வாழ் முஸ்லிம்கள் நன்கு புரிந்து செயற்பட கடமைப்பட்டுள்ளார்கள்.

மேற்குறித்த பின்னணியிலேயே 27-06-02ம் திகதிய கல்குடா முஸ்லிம்களின் ஹர்த்தாலை நாம் அணுகவேண்டியுள்ளது. அன்றையதினம் கிழக்குமாகாணம் முழுவதும் ஹர்த்தால் என பேசப்பட்டது. இங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுமா? என்ற கேள்வி எல்லோரிடமும் இருந்தது. ஹர்த்தால் குறித்து கிழக்கு மாகாணத்தின் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களில் விடுக்கப்பட்ட முன்னறிவிப்புக்கள் எதுவும் இங்கு விடுக்கப்படவில்லை. காலையில்தான் ஹர்த்தால் பற்றித்தெரிய வந்தது. (ஹர்த்தாலுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்ட ஊரின் தலைமைத்துவங்கள்? மிரட்டலுக்குப் பயந்து அன்று முழுக்க முகவரி தெரியாமல் ஓடி ஒழிந்து கொண்டன) விளக்கம் கேட்டபோது எமக்குச் சம்மந்தமில்லை என்று கைவிரித்தன. எனவே யார் ஹர்த்தாலை போட்டார்கள் என்ற விளக்கம் ஏதுமில்லாமல், எதுவித அறிவித்தலும் இல்லாமல் வீதியோர இளைஞர்கள் ஹர்த்தாலை அனுஷ்டிக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

மாதத்தில் 10 நாட்கள் ஹர்த்தாலை நடாத்த தங்களுக்கு உரிமை இருப்பதாக கருதிய புலிகள் இயக்கம், முஸ்லிம்கள் ஹர்த்தால் நடாத்துவதை வன்மையாக எதிர்த்தனர். தடைகளை மீறி முஸ்லிம் இளைஞர்களுடன் வம்பு செய்தனர். இதனால் கல்குடாவே அல்லோலகல்லோலத்திற்குள்ளானது. திட்டமிடப்பட்டிருந்தும் முன்னறிவித்தல் இல்லாத ஒழுங்கமைப்பில்லாத இந்த ஹர்த்தால் எமக்கு பேரிழப்பைத் தந்தது. வியாபாரத்திற்குச் சென்றவர்கள், மீன்பிடிக்கச் சென்றவர்கள், பிரயாணிகள் தகவல் அறியாது தமிழ் பிரதேசங்களில் சிக்கிக்கொண்டனர். சிலர் தமிழ் காடையர்களால் பிடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பி வந்தார்கள். பலர் உயிரோடு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். சிலர் தீயில் போட்டு எரிக்கப்பட்டார்கள். இன்னும் சிலருக்கு என்ன ஆனது என்றே தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



எனவே இங்கு நாம் எமது உணர்ச்சிக்கும் ஆத்திரத்திற்கும்தான் முன்னுரிமை கொடுத்தோம் அழிவுகள் பற்றிச் சிந்திக்கவில்லை. முன்யோசனையுடன் நடந்திருந்தால், முன்னறிவித்தலுடன் ஒழுங்கமைத்திருந்தால் அநியாயமான இவ்வுயிர் இழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம்.

## 27-06-2002 வாழைச்சேனை நகர் ஏன் தீயில் குளித்தது?

ஒரு சமூகத்தின் அரசியல், பொருளாதார, கலை, கலாச்சார, பண்பாட்டு இருப்பை அடக்கி ஒடுக்குவதன் ஊடாக, அச்சமூகத்தைப் பலவீனப்படுத்தப்பட்ட நிலைக்கு கொண்டு வந்து, தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் தந்திரோபாயத்தை வடகிழக்கின் முஸ்லிம் தேசத்தில், விடுதலைப்புலிகளும், ஏனைய தமிழ் அமைப்புகளும் மேற்கொண்டு வந்துள்ளன. இதனால் பல சந்தர்ப்பங்களில் இன முறுகலையும் அவை தோற்றுவித்து வந்துள்ளன.

நவீன உலகில் ஒரு நாட்டை அடிபணிய வைப்பதற்கும், அதன் அரசியல், பொருளாதார பலத்தை ஒடுக்குவதற்குமாக வல்லரசு நாடுகள் மேற்கொள்ளும் புதிய யுத்த தந்திரோபாயமாக அந்நாடுகள் மீது பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்து, அதனூடாக அந்நாடுகளைப் பலவீனப்படுத்தி, அதன் அனைத்து துறைசார் வளர்ச்சியையும் உடைப்பதற்கு திட்டமிடுவதை நாம் அவதானிக்கலாம்.

இவ்வாறான தந்திரோபாயத்தின் அடிப்படையில் முஸ்லிம் பிரதேசங்களில் அரசியல், பொருளாதார நிலைகளை இலக்கு வைத்து தாக்கும் நடவடிக்கைகளை, புலிகள் கல்குடாத் தொகுதியில் அமைந்துள்ள முஸ்லிம் பிரதேசங்களிலும் தொடர்ந்தேர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் பதவியேற்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசும், விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து புதிய சூழல் தோன்றும் என்ற நம்பிக்கை தொடர்ந்தது. இருந்தபோதும், விடுதலைப்புலிகள் தமது வழமையான நடவடிக்கைகளான முஸ்லிம் பிரதேசங்களில் ஆட்கடத்தல், கப்பம் அறவிடல், பொருளாதார நடவடிக்கைகளை ஒடுக்குதல், வர்த்தக முயற்சிகளைத் தடுத்தல், வாகனக் கடத்தல், மற்றும் சொத்துக்களை அபகரித்தல் முதலிய செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தனர்.

யுத்த சூழலில் மறைமுகமாக நடந்தேறிய விடயங்கள், யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் பகிரங்கமாக நடந்தேறின. தட்டிக்கேட்பதற்குப் பதிலாக அனைத்துத் தரப்பினரும் வாய்மூடி அடங்கிக் கிடந்தனர்.

## ஹர்த்தால் ஏன் அனுஷ்டிக்கப்பட்டது ?

நீண்டகாலமாக முஸ்லிம்கள் முற்பணம் கொடுத்து வாகரை, பனிச்சங்கேணி, மாங்கேணி போன்ற பிரதேசங்களில் மீன், இறால் போன்ற வர்த்தகங்களில் ஈடுபட்டு வந்தனர். இது புலிகளுக்கு கப்பம் வழங்குவதன் ஊடாகவே நடைபெற்று வந்தது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின் புலிகளின் வாகரைப் பொறுப்பாளர் ரெஜி என்பவர் தலையிட்டு, தமிழ் மீனவர்களது மீன்களை, முஸ்லிம் மீனவ வர்த்தகர்களுக்கு வழங்காமல் தடைசெய்தார். மீன், இறால் என்பவற்றுக்காக முஸ்லிம் வியாபாரிகளால்



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணமான சுமார் 20 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை, முஸ்லிம் மீன் வியாபாரிகள் அறவிட முடியாமல் தடுக்கப்பட்டனர். இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவுக்கும், பொலிஸிலும் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் முஸ்லிம் மீன்பிடி வர்த்தகர்கள் இழுத்தடிக்கப்பட்டனர்.

இது தவிர, வயற் பிரதேசங்களில் வைத்து முஸ்லிம்களுக்குச் சொந்தமான மூன்று உழவு இயந்திரங்கள், பலாத்காரமாக பறித்தெடுக்கப்பட்டன. இது தொடர்பாகவும் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எங்களால் எதுவும் செய்வதற்கு முடியாது என்று கைவிரித்து விட்டனர்.

அன்றாடம் விறகு எடுத்து விற்று வாழ்க்கையை ஓட்டும் சாதாரண கூலித்தொழிலாளர்கள் பத்துப்பேரின் துவிச்சக்கர வண்டிகளும், விறகுக்காகச் சென்ற ஒன்பது மாட்டு வண்டிகளும் புலிகளால் புணானையில் வைத்து பறிக்கப்பட்டன.

மேலும் கொழும்பிலிருந்து வாடகைக்கு அமர்த்தி வரப்பட்ட 60-7899 இலக்கமுடைய வான் சித்தாண்டியில் வைத்து புலிகளால் கடத்தப்பட்டது. சாரதியும், உரிமையாளரும் சிறைப்பிடிக்கப்பட்டு இதுவரை விடுவிக்கப்படாதுள்ளனர்.

இவ்வாறே கொழும்பிலிருந்து வாடகைக்கு அமர்த்தி வரப்பட்ட 59-1330 இலக்க பிறிதொரு வானும் சாரதியும் கடத்தப்பட்டனர்.

தமிழ் பிரதேசங்களில் வழமையாக வியாபாரத்தில் ஈடுபடும் முஸ்லிம் வர்த்தகர்கள் அங்கு செல்வதற்கோ,வியாபாரம் செய்வதற்கோ முடியாது தடுக்கப்பட்டனர்.

மேலும் சகலவற்றிற்கும் கப்பங்கேட்டு தொடர்ந்தேர்ச்சியான மிரட்டல்கள் முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டாயப்படுத்தப்பட்டு வந்தன.

இப்படியான நெருக்குதல்கள் மூலம் முஸ்லிம்களின் சுயகௌரவத்திற்கும், முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்கும் அச்சுறுத்தல் விடப்பட்டிருந்த சூழ்நிலையிலேயே இவற்றையும், மூதூரில் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளையும் கண்டித்தும் கிழக்கு மாகாணத்தில் 27-06-2002 அன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

## கடைகள் எரிக்கப்பட்டதும், குண்டுவீச்சும்.

27-06-2002 ந் தேதி ஹர்த்தாலை முறியடிக்கும் நோக்கில் புலிகள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக முஸ்லிம் இளைஞர்களுக்கும் புலிகளுக்குமிடையிலான வாய்த்தகராறு, முற்றி கைகலப்பு, கல்வீச்சு, கைக்குண்டு வீச்சுவரை சென்றது. இந்த சம்பவத்தின் போது பல முஸ்லிம்களும், சில தமிழர்களும் இருதரப்பிலும் கடுமையான காயங்களுக்கு உட்பட்டனர்.

காயப்பட்டவர்களை வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோது, அங்கு திரண்டுவந்த தமிழர்கள் காயமடைந்த ஒருவரை ஏற்றிச்சென்ற மோட்டார் சைக்கிளை எரித்தனர். மேலும் வாழைச்னேை பஸாரில் நின்ற முஸ்லிம்கள் மீது அவர்கள் குண்டுவீச்சு, கல்லெறியை மேற்கொண்டபோது முஸ்லிம்கள் சிதறி ஓடினர். அவர்களின் துவிச்சக்கர வண்டிகளை எரிந்து கொண்டிருந்த டயருக்குள் போட்டு புலிகள் எரித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



காலை 10.30 மணியளவில் வாழைச்சேனை பஸாரிலிருந்த முஸ்லிம்களின் மூன்று கடைகள், தமிழ் கும்பலால் எரிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து முறுகல் நிலை உக்கிரமடைந்தது. 12.30 மணியளவில் ஸ்தலத்திற்கு விரைந்த ராணுவத்தளபதி சுனில் தென்னக்கோன் முஸ்லிம் வர்த்தகர்களை ஹைறாத் பள்ளிவாயலில் அழைத்து கூட்டமொன்றை நடாத்தினார். அமைதி காக்கும்படியும், வர்த்தக நிலையங்கள் பாதிக்காமல் தாங்கள் பார்த்துக்கொள்வதாகவும் உறுதியளித்தார். ஆனால் வர்த்தகர்கள் தங்களது வியாபாரத் தலங்களிலுள்ள பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு உதவி புரியுமாறு கெஞ்சிக் கேட்டனர். சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் அழைத்து பேசவேண்டிய விடயத்தை முஸ்லிம் வர்த்தகர்களை மாத்திரம் அழைத்துப் பேசியது என்பது எந்த வகையில் நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் என்று இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் கருதினாரோ தெரியாது.

பி.ப. 4.00 மணியளவில் வாழைச்சேனை வர்த்தக நிலையங்கள் ஒரே நேரத்தில் கொழுந்து விட்டு எரியத் தொடங்கின. வாழைச்சேனை பள்ளிவாயலுக்கு அருகாமையில் அமைந்துள்ள வை. அஹமட் வித்தியாலய தற்காலிகக் கொட்டில் தீவைக்கப்பட்டு ஊழித்தீயாக கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. ஊரே தீக்காடாக மாறிக்கிடந்தது.

ஜும்ஆப் பள்ளிவாயல் வரை தீ எழுந்தது. இளைஞர்களும், பெரியவர்களும் தீயைக்கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். பல திக்குகளிலிருந்தும் குண்டுகள் சீறி வந்து விழுந்தன. கண் முன்னே பலர் காயமடைந்தனர். காயப்பட்டவர்களை பலர் கிடைத்த வாகனங்களில் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு எடுத்துக் கொண்டு ஓடினர். ஏறக்குறைய 60 க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்து கொண்டு செல்லப்பட்டனர். இவ்வளவு பெரிய தொகைப் பேருக்கு வைத்தியம் செய்வதற்கு எந்தவித அடிப்படை வசதியும் மாஞ்சோலை வைத்தியசாலையில் இருக்கவில்லை. இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வாழைச்சேனை மாவட்ட வைத்திசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளிப்பதற்கும் பாதுகாப்பு ரீதியாக இயலாத நிலை காணப்பட்டது. மீன் ஏற்றும் திறந்த லொறிகளில் காயமடைந்தவர்கள் 60 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பொலநறுவை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

மாஞ்சோலை வைத்தியசாலையில் வைத்து வாழைச்சேனையைச் சேர்ந்த முஹம்மது ஹனீபா சலீம் என்ற மாணவனும், அப்துல் கபூர் சஹாப்தீன் என்பவரும் மரணமடைந்தனர். பொலநறுவை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் முஹம்மது அன்வர் என்பவரும் மரணமடைந்தார். இதில் படுகாயமடைந்த உமர்லெவ்வை ஹாஜா முகைதீன், மற்றும் ஆதம்பாவா பதுர்தீன் ஆகியோர் கண்டி வைத்தியசாலையில் பின்னர் மரணமடைந்தனர்.

28-06-2002 அன்று ஜும்ஆத் தொழுகைக்காக செம்மனோடை எனும் எல்லைக் கிராமத்தின் ஜும்ஆப் பள்ளிவாயலில் கூடியிருந்தபோது கைக்குண்டு வீச்சுக்கு இலக்காகி எட்டுப்பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களும் பொலநறுவைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் முஹம்மது இஸ்மாயில் பரீத் (முபாறக்) என்பவர் கண்டி வைத்தியசாலையில் வைத்து மரணமானார்.

26-06-2002 அன்று வாழைச்சேனையில் தமிழ் சகோதரர் ஒருவரின் திருமண வீட்டுக்குச் சமையல் வேலைக்காகச் சென்ற ஹயாத்து முஹம்மது ஜனுதீன், ஹயாத்துமுஹம்மது ஜனுஸ்தீன் என்ற இரு சகோதரர்களும் 27-06-2002 அன்று, திருமண வீட்டிலிருந்து தமிழ்க் காடையர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். 30-06-2002ல் இந்த சகோதரர்களின் மையித்துகளும் டயர் போட்டு எரிக்கப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com



யுத்தகளத்தில் கொல்லப்படும் இராணுவ வீரர்களினதும் புலிகளினதும் உடல்களையும் பரிமாறிக்கொள்ளும்போது இந்த இரண்டு சகோதரர்களின் உடலை மாத்திரம் அவர்களின் மதக் கடமைப்படி நல்லடக்கம் செய்வதற்கு கொடுக்காது புலிகள் தடுத்தார்கள் என்பது, அவர்களின் கோரத்தனமான பாஸிசவெறி உலகிற்கு எட்டக்கூடாது என்பதில் அவர்களுக்கு இருந்த கரிசனையை படம்பிடித்துக் காட்டுகிறது.

மேலும் 'புணானை'க்கு மீன்பிடிக்கச்சென்ற மூன்று மீனவர்களான முஹம்மது அபூபக்கர் ஹயாத்து முஹம்மட், ஹயாத்து முஹம்மது உசன் (ஜமால்தீன்), நெய்னா முஹம்மட் அபூசாலி, மட்டக்களப்பிற்கு சைக்கிளில் சென்று பொருட்களை வாங்கிக்கொண்டு வீடு திரும்பி வந்த பி.எம். அஜ்வத். எச்.எம். கலீல் ரஹ்மான், வடை விற்கச் சென்ற மற்றும் ஒருவர் என மொத்தமாக ஆறு பேர் 27-06-2002 அன்று சென்றவர்கள் இதுவரை வீடு திரும்பவேயில்லை. (அவர்கள் கோரமாக, கோழைத்தனமாகக் கொன்றொழிக்கப்பட்டார்கள் என்பதே பிந்திய செய்தியாகும்)

வாழைச்சேனை சந்தையில் இருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான 106 வர்த்தக நிலையங்களும், பொலிஸ் நிலையச் சந்தியில் இருந்த முஸ்லிம்களது 12 கடைகளும் எரிக்கப்பட்டதுடன், பாலைநகரிலிருந்த மூன்று வீடுகள் எரிக்கப்பட்டன. மேலும் 3 மீன்பிடிப் படகுகளும் எரிக்கப்பட்டன. இந்த அனர்த்தங்கள் அனைத்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில்- கடந்த 27.06.2002ந் தேதியன்று முஸ்லிம் சமூகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அனர்த்தங்களாகும்.

## இடம்பெயர்வும், வெளியேற்றமும்

இக்கோர நிகழ்வைத் தொடர்ந்து பதட்டமான ஒரு சூழ்நிலையே காணப்பட்டது. ஒவ்வொருநாளும் ஒருவித பரபரப்புடனேயே கழிகின்றது. 14-07-2002 அன்று பாலைநகருக்கு வந்த விடுதலைப்புலிகள் அங்கு யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின் குடியேறி வாழ்ந்து வந்த பாலைநகர் வாசிகளை உடனடியாக வெளியேறும்படி கட்டாயப்படுத்தியுள்ளார்கள். இரவு வேளை என்றபடியால் பொழுது விடிந்ததும் வெளியேறுவதாகக் கெஞ்சிக்கூத்தாடியதனால், காலையில் இருக்கக்கூடாது என்று கடுமையான உத்தரவிட்டுச் சென்றுள்ளனர். 15-07-2002 அன்று எஞ்சியிருந்த ஒன்பது குடும்பங்களும் வெளியேறியுள்ளனர். இரு நூறு வருடங்களுக்கு மேல் வாழ்ந்துவரும் முஸ்லிம்களின் தடயங்களை அழித்தொழித்து தங்களது இனத்தின் விடுதலையை, அடைந்து கொள்ள புலிகள் எண்ணுகின்றார்களா? என்று சிந்திக்கத் தூண்டுகின்றது.

குடா நாட்டிலிருந்து 24 மணிநேர அவகாசத்துடன் உடுத்த உடையுடன் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களுக்கும் இந்த மக்களுக்கும் இடையில் என்ன வித்தியாசம். குடாநாட்டில் வந்து முஸ்லிம்களைக் குடியேறும்படி புலிகளின் தலைவரினால் கொடுக்கப்பட்ட அழைப்பு? புலிகளின் தலைவருக்கும் முஸ்லிம்காங்கிரஸின் தலைவருக்குமிடையிலான கூட்டறிக்கையும் , முஸ்லிம்களுக்கான அழைப்புக்கும் என்ன பெறுமதி? இப்படியான துரதிஸ்ட நிகழ்வுகள் எமக்குச் சொல்வதென்ன? எதிர்காலத்தில் முஸ்லிம்கள்தொடர்பான எந்த நடவடிக்கையாக இருந்தாலும், மிகவும் நிதானமாக, ஆழமான ஆய்வின் பின்னரே நம்மால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதைக் கோடிட்டுக் காட்டுவதுடன், புலிகளின் பல முகங்களின் தோற்றத்தையே இந்த நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



## ஹர்த்தாலை முறியடிப்பதற்கு புலிகள் எடுத்த நடவடிக்கை

முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக ரீதியான எதிர்ப்பை வெளிப்படுத்தும் நடவடிக்கையை எப்படியாவது நடைபெறாமல் தடுக்கவேண்டுமென்ற முனைப்பில் புலிகள் செயற்பட்டனர்.

அவர்கள் பூட்டப்பட்டுக் கிடந்த வாழைச்சேனைக் கடைத்தெருவை திறக்கச் செய்வதற்கு வர்த்தகர்களை கட்டாயப்படுத்தினர்.

வாழைச்சேனை பஸ்டிப்போவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்களை கொண்டு வந்து, மட்டக்களப்புக்கான பஸ்சேவையை புலிகளே நடாத்த முற்பட்டனர்.

தங்களால் மேற்கொள்ளப்பட்ட ஹத்தாலை புலிகள் அமைப்பினர் தடுக்கும் முகமாக திட்டமிட்டுக் கருமமாற்றுவதை முஸ்லிம் இளைஞர்கள் உணர்ந்து கொண்டு புலிகளின் முயற்சியைத் தடுக்க முனைந்தனர். வீதிகளில் டயர்களைப்போட்டு எரித்தனர்.

இதில் வாக்குவாதம் ஏற்பட்டது. கல்லெறியாக மாறிக்கைக்குண்டுவீச்சு வரை சென்றது. இது திடீர் சம்பவமாக அமைந்தாலும், முஸ்லிம் பிரதேசங்களையும், அவர்களின் இருப்பையும், பொருளாதாரத்தையும் சிதைப்பதன் மூலமாக முஸ்லிம்களின் திரட்சியை சிதைக்கலாம் என்ற புலிகளின் நீண்டகால சதியை இந்நடவடிக்கைகளும், நிகழ்வுகளும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

## கோறளை மத்திய பிரதேச செயலகம் திறக்கப்படல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் 24% சதவீதம் வாழ்கின்றனர். முஸ்லிம்களுக்கென காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய மூன்று பிரதேச செயலகப்பிரிவுகள் நிருவாகப் பிரிவுகளாகவுள்ளன. அதே வேளை 75% சதவீத தமிழர்களுக்கு 09 பிரதேச செயலகப் பிரிவுகள் காணப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 24%மாக வாழும் முஸ்லிம்கள் 2% வீதத்திற்கும் குறைந்த நிலப்பங்கீட்டைக் கொண்டிருக்க, தமிழ் மக்கள் 98%க்கும் அதிகமான நிலப்பரப்பை தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

இச்சூழ்நிலையிலேயே கோறளை மத்தி என்ற பிரதேச செயலகம் உருவாக்கப்பட வேண்டுமென்ற முனைப்பு மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் வேண்டுகோளாக அமைந்திருந்தது. இது முஸ்லிம்களது பாரம்பிய காணிகளை ஒன்றிணைத்து உள்ளூர் நிருவாக நடவடிக்கைகளை பரவலாக்கிக் கொள்வதற்கான ஒரு நடவடிக்கையே. இதனூடாக தமிழ் பிரதேசங்களைக் கூறுபோட்டு தன்னில் உள்வாங்கிக் கொண்டதாக இது அமையாது.

உண்மையில் இப்பிரதேசங்களில் முஸ்லிம்கள் பல தசாப்தங்களாக வாழ்ந்து வந்துள்ள பிரதேசங்களை கொண்டே இப்பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது. இதற்காக வேண்டி புலிகளின் தூண்டுதல்களால் பல ஹர்த்தால்கள் நடாத்தப்பட்டதுடன் தமிழ்த் தரப்பினாலும் விமர்சிக்கப்பட்டன. சம காலத்தில் கிரான் பிரதேசத்திற்கு ஒரு பிரதேச செயலகம் பிரிக்கப்பட்டபோது ஓட்டமாவடி பிரதேச செயலகத்துக்குரிய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளான கள்ளிச்சை, வடமுனை, ஊத்துச்சேனை, புணானை



படிப்பகம்

www.padippakam.com



மேற்கு, வாகனேரி போன்ற மிக முக்கியமான விவசாய நிலங்கள் கிரான் பிரதேச செயலகப்பிரிவுக்குள் கொண்டு வரப்பட்டன. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு இருந்த 40 சதுர கிலோமீற்றர் மொத்த நிலப்பரப்பு, 23 சதுர கிலோமீற்றர்களாக குறைக்கப்பட்டன. இந்த அநீதி தொடர்பாக எந்தப்பிரிவில் இருந்தும் வாய் திறக்கப்படவில்லை.

இப்படி இருந்தபோதும் புலிகள் அமைப்பினர் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் திறந்தது என்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்வாகவே கருதினர். மேலும் இச்செயலகம் செயற்படாமல் எல்லா மட்டங்களிலும் தடைசெய்வதற்கான முயற்சியை தற்போதும் மேற்கொண்டு வருகின்றனர். அதில் ஒரு அங்கமாக அமைந்திருந்த வாழைச்சேனை முஸ்லிம் வர்த்தக நிலையங்களை அழிப்பது என்ற முன்கூட்டிய சதிநாசகாரத் திட்டம் கடந்த 27-06-2002 ந் திகதி இடம்பெற்ற ஹர்த்தாலை சாக்காகக் கொண்டு அரங்கேறியது.

## உரிமைக்கோசம் எழும்போது தடுத்தல்

முஸ்லிம்கள் மீது திணிக்கப்படும் அடக்கு முறைகளைக் கண்டித்து ஜனநாயக ரீதியில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முனையும்போது அவற்றை மேலெழ விடாது அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையை புலிகள் மேற்கொண்டு வந்துள்ளனர். அதில் ஓர் அங்கமாகவே 27-06-2002 அன்று கிழக்கில் நடந்த ஹர்த்தாலை புலிகள் ஒடுக்க முனைந்தனர். தங்களின் பாஸிச நடவடிக்கைகளை வடகிழக்கில் எந்தச் சக்திகளும் விமர்சிக்கவோ, அவற்றிற்கு எதிராக குரல்கொடுக்கவோ விடாது தடுத்தல் என்பதில் புலிகள் மிகவும் இறுக்கமாக செயற்படுகின்றனர்.

27-06-2002 அன்றும் ஜனநாயக ரீதியில் தங்களது சமூகத்திற்கு இழைக்கப்படும் அநீதியை முஸ்லிம் மக்கள் சாத்வீகமான முறையில் உலகிற்குக் எடுத்துக்காட்ட முனைந்ததை எல்லா வழியிலும் தடுத்து நிறுத்த புலிகள் எடுத்த நடவடிக்கையே அகோர அழிவுக்கு அடி கோலியது.

## கப்பம் கேட்டு நிர்ப்பந்தித்தல்

கல்குடாப் பிரதேசத்திலுள்ள அனைத்து முஸ்லிம் கிராமங்களிலும் கப்பம் அறவிடுவதற்கான நிர்ப்பந்தங்களை, பள்ளிவாயல்களையும், நிறுவனங்களையும் அழைத்து குறிப்பிட்ட தொகைப்பணம் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் அறவிட்டுத் தரும்படி இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது பலத்த அதிர்ச்சியையும் ஒரு வித முறுகல் நிலையையும் தோற்றுவித்தது.

மேலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும், அதன் தலைமையையும், தமது பிரதிநிதிகளையும் முஸ்லிம் மக்கள் வெறுப்புக்கலந்த சந்தேகப் பார்வையுடன் நோக்கினர் அவர்களின் கையாலாகாத்தனத்தை கண்டிக்கத் தலைப்பட்டனர். (இதன் வெளிப்பாடாகவே கல்குடாத் தொகுதி முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதியும், பிரதியமைச்சருமான முஹிதீன் அப்துல் காதரின் இல்லம் 28. 06. 2002 அன்று தாக்கப்பட்டது)



படிப்பகம்

www.padippakam.com



## வாழைச்சேனை வர்த்தக நிலையங்களை அழித்தல்

வாழைச்சேனை நகரில் 136 வர்த்தக ஸ்தாபனங்கள் அமைந்துள்ளன. இவற்றில் 105 கடைகள் முஸ்லிம் வர்த்தகர்களுக்குச் சொந்தமானது. வர்த்தக நடவடிக்கைகளைப் பொறுத்தவரை இவை வாகரை தொடக்கம் செங்கலடி உட்பட்ட பிரதேசங்களது வர்த்தக மையங்ளை இணைத்து நின்றன.

தமிழ் சகோதரர்களே பெரும்பாலான பொருள் கொள்வனவாளர்களாக இருந்து வந்தனர். வர்த்தகம் மூலம் புலிகளுக்கான கப்பம் அறவிடப்பட்டே வந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப்பின்பே வியாபாரம் மிகவும் களை கட்டி இருந்தது. கப்பம் அறவிடுவதில் சிக்கல்களும் முரண்பாடுகளும் தோன்றின. இந்த நிலையில் முஸ்லிம்களுடனான வியாபார நடவடிக்கையைக் கட்டுப்படுத்த புலிகள் முயற்சிகளை மேற்கொண்டனர்.

சிங்கள பிரதேசங்களில் சிஹல உறுமய, பூமி புத்திரய கட்சிகள் போன்று முஸ்லிம்களிடம் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டாம் என்று தடுக்கும் மறைமுக பிரச்சாரத்தில் புலிகள் ஈடுபட்டு வந்தனர். இது போதியளவு வெற்றியைக் கொடுக்கவில்லை. இந்நிலையிலேயே முதற்கட்டமாக வாழைச்சேனையில் முஸ்லிம்களின் வர்த்தக ஆதிக்கத்தை உடைப்பதற்கு ஹர்த்தாலைப் பயன்படுத்தி ஒட்டுமொத்தமாக அழிக்கும் நடவடிக்கையை கனகச்சிதமாக நடாத்தி முடித்துள்ளனர்.

## பொலிஸ் நிலைய சந்திக்கடைத்தெரு

வாழைச்சேனை பொலிஸ்நிலையச் சந்தியில் சுமார் 12 க்கு மேற்பட்ட சிறுகடைகள் அமைந்திருந்தன. இந்த இடத்தில் இருபது வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்கள் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வருகின்றனர். இது பிரதான சந்தியில் அமைந்துள்ளதால் சுறுசுறுப்பாக வியாபாரம் நடை பெறுகிறது. இந்த இடம் ரெயில்வே பகுதிக்குச் சொந்தமானது.

அண்மையில் கோறளைப்பற்று பிரதேச செயலாளரால் ஒவ்வொரு வர்த்தகர்களுக்கும் தனித்தனியான கடிதம் 10.05 .2002 ம் திகதி அனுப்பப்பட்டிருந்தது. 20.06.2002க்கு முன்னர் இந்நிலங்களிலிருந்து நீங்கள் கடைகளை காலி செய்துவிட வேண்டுமென்றும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடுமென்றும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த வர்த்தகர்கள் நீதிமன்றம்மூலம் நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய ஆவணங்களை ரெயில்வே பகுதியில் பெறுவதற்கும் முனைந்து கொண்டு இருக்கும் போதே 27.06.2002 அன்று வாழைச்சேனை பிரதான நகரை எரித்து சாம்பலாக்கிய மறுதினம் 28.06.2002 அன்று பி.ப 1.45 மணிக்கு கூடிய சமாதான கூட்டத்தில் தமிழ் தரப்பிலும் முஸ்லிம் தரப்பிலும் காணப்பட்ட இணக்கத்திற்குப் பின்னரே அன்று இரவு 8.00 மணியளவில் இக்கடைகளிலிருந்து பொருட்கள் கொள்ளையிடப்பட்டு எரிக்கப்பட்டன.

இக்கடைகளுக்கும் பொலிஸ் நிலையத்திற்கும் இடைத்தூரம் 25 மீற்றர் ஆகும். இப்படி இருந்தும் இந்த அனர்த்தத்தை தடுக்காது பொலிஸ் பகுதியினர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பேரால் கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர் என்பதே



படிப்பகம்

www.padippakam.com



வேதனை தரும் உண்மை. (கடந்த 07-07-2002 அன்று, இந்த வியாபாரிகள் தங்களது வியாபாரத் தளங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவர்களை வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி அழைத்து, இந்நிலத்தில் எந்தவித புனரமைப்பு நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது எனத்தடுத்ததுடன் மீறி செயல்படுபவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் எனவும் எச்சரிக்கைசெய்து அனுப்பியுள்ளார்.)

இது எல்லா மட்டத்திலும் முன்கூட்டியே திட்டமிட்ட சதியே. குறிப்பிட்ட இடத்திலிருந்து வர்த்தகர்களை துரத்தியடிப்பதற்குச் சந்தர்ப்பம் பாத்த்திருந்த பிரதேச செயலாளர், கிராம சேவகர், புலித்தரப்பினர்களும் இச்சந்தர்ப்பத்தை சாதகமான தருணமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

## விவசாயிகளின் நிலை

முஸ்லிம்களுக்குச் சொந்தமான சுமார் பத்தாயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் அமைந்துள்ள வாகனேரி பிரதேச விவசாய நிலத்தில் 2300 ஏக்கர் நிலத்திலேயே முஸ்லிம்களை தங்களது விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு புலிகள் அனுமதி வழங்கினர். பல வருட காலமாக விவசாய நடவடிக்கையில் ஈடுபடாது கைவிடப்பட்டுக் கிடந்த நிலையில், புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கொங்கிரஸுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட கூட்டறிக்கையின் பின்னர் ஓட்டமாவடிப் பிரதேச விவசாயிகள் தங்களது விவசாய நடவடிக்கையை நம்பிக்கையுடன் மேற்கொள்ளத் தொடங்கினர். புலிகளால் உறுதிமொழிகள் பல வழங்கப்பட்டும் இருந்தன. (வடகிழக்கிலுள்ள நிலம் எங்களுடையது - விவசாயம் உங்களுடையது, கடல் எங்களுடையது - மீன் உங்களுடையது. என்றாலும் விவசாயத்துக்கும், மீன்பிடிக்கும் தனியாக கப்பம் செலுத்த வேண்டும் என்ற அவர்களது கோட்பாட்டுக்கிணங்கவே இவை நடந்தேறுகின்றன.)

இடைக்கால பயிர்ச்செய்கைக்கான நீர் வழங்கல் போன்ற அனைத்து நடவடிக்கையையும் புலிகள் கட்டுப்படுத்தியே வந்தனர். தங்களிடமிருந்த சொற்ப மூலதனத்தையும் இழந்த நிலையில் விவசாயிகள் தவித்தனர். தங்களது அரசியல் தலைமையிடம் முறையிட்டனர் நிலைமை சிக்கலாகவே இருந்தது. விவசாயம் உடன் எடுத்து வரக்கூடிய ஒரு தொழிலுமல்ல: அல்லது சரியாக கவனிக்காமல் விட்டால் உரிய அறுவடையும் வீடு வந்து சேராது.

ஏற்கனவே கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் திறந்தவுடன் வயலில் வேலை செய்து கொண்டிருந்த அனைத்து விவசாயிகளும், புலிகளால், பிரதேச செயலகத்தை மூடிவிட்டு வரும்படி கூறித் துரத்தப்பட்டனர். பின்பு பல மட்டங்களில் பேசிய பின்பே மீண்டும் வயலுக்குள் செல்வதற்கு அனுமதி வழங்கினர்.

27-06-2002ல் ஹர்த்தாலைத் தொடர்ந்து வயல்களில் அமைந்திருக்கின்ற அனைத்து உடமைகளையும் புலிகள் எரித்ததுடன், எவரும் வயல்களுக்குள் பிரவேசிக்கக் கூடாது என்றும் தடுத்துள்ளனர். சமாதான இணக்கப்பாடு காணப்பட்டதாக கூறப்பட்டதும், விவசாயிகள் 06-07-2002 அன்று தங்களது வயல்களை பார்வையிடச் சென்றுள்ளனர். அனைவரையும் பொது இடத்தில் அழைத்த புலிகள், முஸ்லிம்களை கீழ்த்தரமாக நடத்தியதுடன், ஒரு முஸ்லிம் வட்டவிதானைக்கு துப்பாக்கியால் அடித்துத் துன்புறுத்தியதுடன், நாங்கள் சொல்லாமல் வயல் பிரதேசத்துக்குள் பிரவேசிக்கக் கூடாது எனவும் எச்சரித்து அனுப்பியுள்ளனர். சுமார் 40 மில்லியன் ரூபாய்களை செலவிட்டு



படிப்பகம்

www.padippakam.com



விவசாயிகள் பரிதவிக்கின்றனர். (தற்போது மீளவும் முஸ்லிம் விவசாயிகள் வயலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளபோதும், அவர்களது விவசாய அறுவடை வீடு வந்து சேரும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை.)

முஸ்லிம்களுக்குச் சொந்தமான விவசாயக்காணிகள் புலிகளால் அபகரிக்கப்பட்டு, அவர்களது மாவீரர்களின் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இப்படியான நெருக்குதலில் இருந்து விடுவித்துக்கொள்ளும் பொருட்டு பெரும்பாலான விவசாயிகள் தங்களது விவசாய நிலங்களை மிக மிகக் குறைந்த விலைக்கு புலிகளின் ஏஜெண்டுகளுக்கு விற்றும் வருகின்றனர்.

இது கூட ஒரு சமூகத்தின் நிலத்தை அபகரித்துக் கொள்வதற்கு தமிழ் பேரினவாதம் திட்டமிட்டு எல்லா மட்டங்களிலும் காரியமாற்றி வருவதையே காட்டுகின்றன. இது பொதுவாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் விவசாயிகள் அனைவருக்கும் பொருந்தும். எல்லாப்பகுதி முஸ்லிம் விவசாயிகளும் தங்களது நிலங்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் அபகரிக்கப்பட்டு பறிகொடுத்தே வருகின்றனர்.

எம்மிடம் பெறப்பட்ட கப்பம், அபகரிப்பு ஊடாகவே புலிகள் ஏஜெண்டுகளை வைத்து முஸ்லிம்களின் நிலங்களை அபகரித்து வருகின்றனர்.

இன்று கிழக்கிலே முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகள் உலகளாவிய ரீதியில் நிகழும் கொடுமைகளுக்கு நிகரானவை. இவை புலிகளின் வழிநடாத்தலோடு, தமிழ் மக்களும் இணைந்து மேற்கொண்ட கொடுமைகளாகும். இந்தக் கணம்வரை அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டவர்களாய், அனைத்து பொருளாதார நடவடிக்கையும் முடக்கப்பட்டவர்களாய் கல்குடா தொகுதி முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றனர்.

துரதிஷ்டவசமாக முஸ்லிம்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகள் அனைத்தும் வெகுசனத் தொடர்புச் சாதனங்களால் வெளியுலகுக்குத் தெரியாமல் திட்டமிட்டு மறைக்கப்படுடதுடன், எதிர்மறையாக முஸ்லிம்களை பிழையாக காட்டுவதற்கே முனைகின்றன.

எதிர்காலத்தில் இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளும் சகல நடவடிக்கையும்,வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார, இருப்பு, புவியியல் என்பவற்றை உறுதிப்படுத்துவதுடன் இடைக்கால நிர்வாகம் ஒன்று அமையும்போது சரியான பேரம் பேசுதலுடன், நம் சமூதாயத்தின் உரிமைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இவை அனைத்திற்கும் அப்பால் எதிர்காலத் தீர்வுத்திட்டத்தில் வடகிழக்கு மாகாண முஸ்லம் மக்களை பலிக்கடாக்களாக்கும் ஆபத்தில் இருந்து அந்த மக்களைப் பாதுகாத்து, அப்பிரதேச முஸ்லம் மக்களது உரிமைகள், பாதுகாப்பு, நிவாரணங்கள், இழந்துள்ள அவர்களது பிரதேசங்கள், சொத்துக்கள் என்பனவற்றை சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படுவதற்கு எல்லாக் கட்சிகளும், அனைத்துத் தரப்பிலுள்ள எமது தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் விசுவாசமாக ஒன்றிணைந்து உழைக்க முன்வர வேண்டும்.

□



படிப்பகம்


www.padippakam.com



## எமது கண்ணீரில் சிறிதை எடுத்துக்கொள்வாய்

~ மஹ்மூட் தர்வீஷ் ~

(பலஸ்தீனக் கவிஞர்)



உனது கண்ணீரை முடித்துவிடாதே
பாத்திரத்தில் சிறிது கண்ணீரை வைத்திரு
சில வேளை நாளை அவனது தகப்பனுக்காக
அல்லது அவனது சகோதரனுக்காக
அல்லது அவனது நன்பன் எனக்காக
நாளைக்கு எங்களுக்காக
இரு துளிக் கண்ணீரை வைத்திரு

எனது நண்பனைப் பற்றி
எனது மண்ணில்லே அதிகம் பேசுகின்றனர்
எப்படி அவன் சென்றான்?
எப்படி அவன் திரும்பவே இல்லை?
எப்படி அவன் தன் இளமையை இழந்தான்?

துப்பாக்கி வேட்டுகள்
அவன் மார்பையும் முகத்தையும் நொறுக்கின
தயவு செய்து மேலும் விபரணம் வேண்டாம்
நான் அவனது காயங்களைப் பார்த்தேன்
அதன் பரிமானங்களைப் பார்த்தேன்
நான் நமது ஏனைய குழந்தைகளைப் பற்றி எண்ணுகிறேன்
குழுந்தையை இடுப்பில் ஏந்திய
ஒவ்வொரு தாயையும் பற்றி எண்ணுகிறேன்

அன்புள்ள நண்பனே
அவன் எப்போது வருவான் என்று கேட்காதே
மக்கள் எப்போது கிளர்ந்தெழுவார்கள்
என்று மட்டும் கேள்.



படிப்பகம்

www.padippakam.com



## ஜூன், ஜூலை நிகழ்வுகள்: புரிதல்களும் தாக்கங்களும்

27-06-2002 அன்றையதும் அதன் பின்னருமான முஸ்லிம் எதிர்ப்பு இனவாத வன்முறைகளும், திரிபுபடுத்தல்களும், வடகிழக்கில் முஸ்லீம்களை பொருளாதார, அரசியல், கல்வி, பண்பாட்டுத் தளங்களில் இருந்து அகற்றுவதற்கும், அவர்களது தனித்துவ மற்றும் பாரம்பரிய தாயக அடையாளங்களை வேரறுத்து விடுவதற்குமான தமிழ் தேசிய தீவிரவாதிகளின் நீண்ட கால மறைமுக திட்டம் ஒன்றின் இன்னும் ஒரு வெளிப்பாடாகவே இனம் காணப்பட்டுள்ளது.

இவ்வகையில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, அவர்களது பொருளாதார வளங்கள் ஆயுத முனையில் பறிமுதல் செய்யப்பட்டமை, கிழக்கின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, அவர்களது பொருளாதார வளங்கள் அழிக்கப்பட்டமை பல்வேறு கூட்டுப் படுகொலைகளும், சில்லறை கொலைகளும்... என நீளும் இனச் சுத்திகரிப்புக்கான பட்டியலில் வாழைச்சேனை ஜூன், ஜூலை நிகழ்வுகளும் ஒரு வரலாற்றுத் துயரமாகும்.

வாழைச்சேனையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகள் இப்பிரதேச மக்களின் பொருளாதாரம், கல்வி, இருப்பு, வாழ்வதற்கான உரிமை, சமூக உறவுகள் போன்ற பல்வேறு கூறுகள் மீதும் பின்நோக்கிய தாக்கங்கள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளது.

## ஜனநாயக மற்றும் மனித உரிமை மீதான தாக்கங்கள்

### (அ). மறுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரம்

எல்.ரீ.ரீ.ஈ இனர் முஸ்லிம் சமூகத்தில் நிகழ்த்திய ஆட்கடத்தல்,கப்பம் கோரல், பொருளாதார வளங்கள் மீது தாக்குதல்கள் மற்றும் நாசகார வேலைகளை மேற்கொள்ளல் என்பவற்றை கண்டிக்கும் முகமாகவும், அவற்றை வெளிப்படுத்தும் முகமாகவும் கிழக்கின் பல்வேறு முஸ்லிம் பிரதேசதங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டதற்கிணங்க கல்குடாத் தொகுதி முஸ்லிம் பிரதேசத்திலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் சர்வதேச சக்திகளிடம்- குறிப்பாக சமாதான பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படும் இச்சூழ்நிலையில் இத்தகைய மக்கள் போராட்டமானது தமிழர் போராட்டத்தின் நியாயங்களுக்குப் புறம்பாக போராட்டத்தின் பேரால் மேற்கொள்ளப்படும் அநீதிகளை வெளிப்படுத்திவிடும் என்பதனால் உசாரடைந்த ஆயுதக்குழுவினர் மேற்கொண்ட வன்முறைகளால் அப்பாவி முஸ்லிம்கள் பாரிய பொருளாதார, கலாசார இழப்புகளுக்கு ஆளாகினர்.

ஆயுதக் குழுவினரின் அட்டகாசம் ஒருபுறமிருக்க, தமிழ் ஊடகங்களும் நிகழ்வுகளை திரிபுபடுத்தி முஸ்லிம்களை தீவிரவாதிகளாகவும், வன்முறையாளர்களாகவும் சித்தரித்து, அத்துடன் இதுவரை செலுத்திய கப்பத்தை இனியும் செலுத்துவதில் என்ன வந்து விட்டது என்றும் ஹர்த்தால் அனுஷ்டித்த முஸ்லிம்களை 'நேற்று முளைத்த காளான்கள்' என்று குறிப்பிட்டு ஜனநாயக உரிமைகளை கொச்சைப்படுத்தி, மலினப்படுத்தி



படிப்பகம்

www.padippakam.com



எழுதித்தள்ளின. (இதுவரைக்கும் தமிழ் ஆயுதக்குழுக்கள், ஆகக்குறைந்தது மாத்தில் ஒருநாளாவது ஹர்த்தாலாக அனுஷ்டித்து வந்தமை இங்கு கவனிக்கத்தக்கது)

ஜனநாயக அமைப்பொன்றில் முஸ்லிம்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தாக்குதல்களும் திரிவுபடுத்தல்களும் எதிர்கால இலங்கையில் தமிழ் மேலாதிக்கத்தின்கீழ் முஸ்லிம்கள் உள்வாங்கப்படின், என்ன நிகழும் என்பதனை தெளிவாகச் சொல்லிவிட்டது.

### (ஆ). மத, கலாசார உரிமை மறுப்பு

28-06-2002 அன்று ஜும்ஆ தொழுகைக்காக மக்கள் கூடியிருந்தவேளை மஸ்ஜிதுல் குபா மீது குண்டுவீச்சு செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஒன்றில் ஒருவர் ஸஹீதானதுடன் ஏழுபேர் படு காயமுற்றனர்.

அத்துடன் 27ம் திகதி அன்று சமயலுக்காகச் சென்ற இரு அப்பாவி முஸ்லிம் சகோதரர்களை அநீதியாக கொலை செய்து புதைத்ததுடன், அந்த இரு ஜனாஸாக்களையும் மாவட்ட நீதிபதி, சட்ட மருத்துவ அதிகாரி, மற்றும் பொலிஸ் இராணுவ அதிகாரிகளின் துணையுடன் தோண்டியெடுத்து வருவதற்கு முற்பட்ட வேளை, தகப்பனின் கண்முன்னே இரு சடலங்களும் எரியும் டயரில் தூக்கியெறியப்பட்டு எரிக்கப்பட்டன.

இது முஸ்லிம் மத கலாசார வழிமுறைக்கும், மனித தர்மத்துக்கும் முற்றிலும் எதிரானதுமாகும். அத்துடன் வயலுக்குச் சென்ற முஸ்லிம்களின் தொப்பிகளை கழற்றும்படி வற்புறுத்தப்பட்டு ஹிம்ஸை செய்யப்பட்டதுடன், ஜுலை 18-19ம் திகதி இரவு நேரங்களில் வாழைச்சேனை ஜும்ஆ பள்ளியை தாக்குவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை சர்வதேச குற்றவியல் கோட்பாட்டின்படி பாரிய குற்றச்செயலும், மத, கலாசார, மனித உரிமை நிராகரிப்புமாகும். இத்தகைய குற்றவாளிகள் சர்வதேச நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டியவர்களாகும்.

காத்தான்குடியில் பள்ளிவாயலில் ஆடிய வெறியாட்டம், ஏறாவூர் பள்ளிவாயலில் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல், குர்ஆன் பிரதிகளை அவமதித்த பல நிகழ்வுகள் என நீளும் முஸ்லிம்களின் தனித்துவ அடையாளங்களை சிதைப்பதற்கான தமிழ் குறுந்தேசிய வாதிகளின் திட்டத்தில் இவையும் புதிதாக தற்போது சேர்க்கப்பட்டுள்ளன.

## இடம் பெயர்வுகளும் வெளியேற்றங்களும்

27-06-02ம் திகதி வன்முறைகளால் பதுரியா நகர், மாஞ்சோலை, மாவடிச்சேனை, செம்மண்ணோடை, காவத்தமுனை போன்ற எல்லைக் கிராமங்களில் இருந்தும் வாழைச்சேனை, பிறைந்துரைச்சேனை கிராமங்களின் எல்லைப் பகுதிகளில் இருந்தும் அத்தோடு கேணிநகர், பாலைநகர் கிராம பகுதிகளில் இருந்தும் சுமார் 2600 குடும்பங்கள்வரை இடம்பெயர்ந்துள்ளன. இந்நிலையில் 15-07-2002 ம் திகதியுடன் பாலைநகரிலும், கேணிநகரிலும் எஞ்சியிருந்த மீதிக் குடும்பங்களும் தமிழ் தீவிரவாத ஆயுதக்குழுவின் அச்சுறுத்தலின் காரணமாக வெளியேற்றப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய வெளியேற்றங்களும், தற்காலிக அல்லது நீண்டகால புலம்பெயர்வுகளும் இந்த மக்கள் தொடர்ந்து பலமுறை சந்தித்தவைகளே. குறிப்பாக பாலைநகர், கேணிநகர் மக்களின் இந்த அவலம் சுமார் 20 வருடங்களாக தொடர்கிறது. இதற்கான மாற்று ஏற்பாடுகளோ அந்த மக்களின் பாதுகாப்பு, இருப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கான திட்டங்களோ இதுவரை உருவாக்கப்படவில்லை. இதனால் தனிப்பட்ட ரீதியிலும் சமூக ரீதியிலும் பல்வேறு எதிர் விளைவுகள் தோன்றியுள்ளன.

### (அ). தனிப்பட்ட ரீதியிலானவை

* தனிமனித வாழ்வுரிமை மீறப்பட்டுள்ளது.

* சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டும், தீயிடப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றமை.

* எதிர்காலத்தில் மக்கள் தமது பூர்வீக இடங்களுக்கு மீளமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

* இம் மக்களின் பொருளாதார மூலங்கள் பாதிக்கப்படுவதுடன், வேலையில்லாப் பிரச்சினையும் புதிய தொழில்களை இனங்காண்பதில் உள்ள பிரச்சினைகளும் இங்கு கவனிக்கத்தக்கது.

* பொருளாதார வளங்கள் பாதிக்கப்படுவதனாலும், வருமானமின்மையாலும், புதிய இடங்களில் காணப்படும் அசௌகரியங்களாலும் குடும்ப சுகாதாரம், சிறுவர் கல்வி என்பன பாதிக்கப்படும்.

* மற்றும் ஏனைய அகதி வாழ்வின் அவலங்களும் இங்கு கவனிக்கத்தக்கது.

### (ஆ). சமூக ரீதியிலானவை

இத்தகைய புலம்பெயர்வுகளால் குறிப்பாக பாலைநகர், கேணிநகர் போன்ற அண்மிய முஸ்லிம் பிரதேசங்களை இழப்பதனால் பின்வரும் சமூக பாதிப்புக்கள் ஏற்படும்.

* முஸ்லிம் பூர்வீகம் மறுக்கப்படுகிறது.

* மக்கள் செறிந்து வாழக்கூடிய பகுதிகளில் எழக்கூடிய வதிவிடப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான எதிர்காலத் திட்டம் ஒன்றை வரைய முடியாது போகும். இதனால் மக்கள் வேறு பிரதேசங்களை (மாவட்டங்களை) நோக்கி நகர்வர்.

* மக்கள், ஏற்கனவே செறிந்து வாழக்கூடிய பகுதிகளை நோக்கி மக்கள் உள்வருவதனால், சமூக உறவில் பாதிப்புகள் ஏற்படும்

* எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் பாதிக்கப்படும்.

* மொத்த கல்வி, சுகாதார மற்றும் சமூக காட்டிகள் கீழ் நோக்கி நகரும்.



படிப்பகம்

www.padippakam.com



* முஸ்லிம்கள் தமது பிரதேசங்களில் இருந்து வெளியேறி வருவதனால், அவ்விடங்களில் வேற்று இனத்தார் திட்டமிட்டு தமது குடியேற்றங்களை மேற்கொள்ளலாம். இதனால் நமது பூர்வீக நிலங்கள் இழக்கப்படும்.

*எல்லைக் கிராமங்கள் கைவிடப் படுவதனாலும், ஏனையவர்களின திட்டமிட்ட குடியேற்றங்களாலும் முக்கிய முஸ்லிம் பிரதேசங்களின் பாதுகாப்பு, பொருளாதாரம், போக்குவரத்து,மற்றும் ஏனைய விடயங்களில் எதிர்காலத்தில் பாரிய நெருக்குதல்ளை சந்திக்க நேரிடலாம்.

*மற்றும் ஏனையவை.

## கல்வி மற்றும் ஏனைய நிறுவன ஊழியர்கள் மீதான தாக்கங்கள்

27ம் திகதி இடம் பெற்ற வன்முறைகளால் வை. அஹமட் வித்தியாலயத்திற்குச் சொந்தமான இரண்டு வகுப்பறைகளை கொண்டமைந்த ஓலைக்கொட்டில் ஒன்றும் அதில் உள்ள தளபாடங்களும், உபகரணங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இப்பந்தி எழுதப்படும்வரை அம் மாணவர்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற தற்காலிக இடமொன்றில்வைத்தே கற்பிக்கப்படுகின்றனர். அத்துடன் பாடசாலைகள், அலுவலகங்கள் என்பன சம்பவ தினத்திலிருந்து ஒரு வாரம் வரை முற்றாக இயங்காதிருந்தன. இதுதவிர தமிழ் பிரதேசங்களில் கடமையாற்றும் முஸ்லிம் ஊழியர்கள் தற்போதுவரை சரியாக கடமைக்கு திரும்ப முடியாதுள்ளனர்.

(வாழைச்சேனை ஹிந்துக் கல்லூரிக்கு கடமைக்குச் சென்ற ஒரு முஸ்லிம் அச்சுறுத்தப்பட்டதால் அவர் தற்காலிக இடமாற்றம் பெற வேண்டியதாயிற்று.)

## பொருளாதாரம் மீதான தாக்குதல்கள்

### (அ). வர்த்தகப் பொருளாதாரம் மீதான தாக்கம்

தமிழ் ஆயுதக்குழுக்கள் வன்முறைக்காக தேர்வு செய்த களம் சந்தைப்பகுதியாகும். முஸ்லிம்களுக்குச் சொந்தமான 111 கடைகள் கொள்ளையிடப்பட்டும் தீ மூட்டப்பட்டும் அழிக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட இழப்புக்கள் 65 கோடியை எட்டியுள்ளது.

இவை ஒரு வன்முறையின் தற்செயல் நிகழ்வுகள் என்பதிலும், முஸ்லிம்களை பொருளாதார ரீதியாக பின்தள்ளுவதற்கான நீண்ட நாள் திட்டத்தின் ஊடாக இடம்பெற்றவை என்பதே இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த வகையில் பொருளாதார செயற்பாடுகளினதும் அபிவிருத்தியினதும் அடிப்படை ஆதாரமான போக்குவரத்துப் பாதைகளை ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம் பிராந்தியங்களிலிருந்து புறநீக்குவதற்கான திட்டம், பொருளாதாரத்தடை போன்ற விடயங்கள் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

இந்தப் பின்னணியில் வாழைச்சேனை சந்தைப்பகுதி அழிக்கப்பட்டு, புதிய சந்தையை தமிழ் பிரதேசத்திற்குள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள்



படிப்பகம்

www.padippakam.com



ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், புதிய சந்தையை பலப்படுத்துவதற்காக வேண்டி பழைய சந்தைப்பகுதியை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகளும், திட்டமிடப்பட்ட அச்சுறுத்தலினூடாகத் தடை செய்யப்படுகிறது.

## சந்தைப்பகுதி அழிக்கப்பட்டதின் விளைவுகள்

* பல முதலாளிமார் வெளி நிற்கும் கடன்களைக் கூட வசூல் செய்ய முடியாத நிலையில் கையறு நிலையை அடைந்துள்ளனர். இதனால் புதிய தொழிலை துவக்குவதற்கான மூலதனத்தை பெற முடியாதுள்ளனர். கடன்களுக்கான வட்டியுடன் சேர்த்து கடன்களை மீளச் செலுத்த முடியாமையால் தமது சொத்துக்களையும் அவர்கள் இழக்க நேரிட்டுள்ளது.

* முதலாளிமாரினதும்- குறிப்பாக வேலைத் தலங்களில் பணிபுரிவோரினது குடும்பப் பொருளாதாரங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் தங்கி வாழ்வோர் உட்பட சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

*வாழைச்சேனை ஜும்ஆ பள்ளிவாயலின் வருமான மூலங்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. (மாதாந்தம் சுமார் 60,000/= க்கு மேல் சந்தைப் பகுதியில் இருந்து வருமானமாகப் பள்ளிவாயலுக்கு கிடைத்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது) இதனால் ஜும்ஆ பள்ளிவாயலின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் பள்ளிவாயல்களில் பணி புரிவோருக்கு சம்பளம் வழங்கவோ அல்லது ஏனைய நிருவாக செலவுகளை செய்யவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை இன்னும் சுமார் குறைந்தது ஆறு மாதங்களுக்கேனும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* சந்தைப்பகுதி மீண்டும் இயங்குவதனை தடுப்பதற்கான முயற்சிகளும், நிலவும் அச்சமும் காரணமாக மீண்டும் சந்தை இயங்காவிடின் எல்லைப்பகுதி கைவிடப்படலாம். இதனால் தீவிரவாதிகளின் ஊடாட்டம் இப்பகுதியில் அதிகரிப்பதற்கான வாய்ப்பும் உண்டு. அத்துடன் வாழைச்சேனை முஸ்லிம் பிராந்தியத்தினதும் எமது பலம் பெருமை வாய்ந்த ஜும்ஆப் பள்ளிவாயலினதும் முக்கியத்துவமும் பாதிக்கப்படலாம்.

*சமூக நலப் பணிகளுக்கான நிதி திரட்டும் இடமாகவும் இதுவரைக்கும் சந்தைப்பகுதி இருந்து வந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்பகுதி முஸ்லிம்கள் தமது சந்தைப் பங்கை இழந்துள்ளனர். இதனாலும் முஸ்லிம் பிரதேசத்தின் எதிர்கால முக்கியத்துவம் பாதிக்கப்படும்.

## (ஆ). மீன்பிடி பொருளாதாரத்தின் மீதான தாக்கங்கள்

27ந் திகதிய வன்முறைகளின் நீட்சியாக முஸ்லிம்களுக்குச் சொந்தமான பத்திற்கும் மேற்பட்ட இயந்திரப்படகுகளுக்கு பெற்றோல் ஊற்றி தீ மூட்ட மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஒன்றில் ஒரு இயந்திரப்படகு முற்றாக தீப்பற்றியதுடன் மேலும் இரண்டு படகுகள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



இந்நிலையில் பீதி காரணமாக, முன்னூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களுக்குச் சொந்தமான இயந்திரப்படகுகள் சுமார் இரண்டு வாரங்கள் முற்றாகக் கடலுக்குச் செல்லவில்லை. (இவர்கள் இதுவரை மாதாந்தம் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவிற்கு மேல் கப்பம் செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது) இவற்றில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன்பிடியாளர்கள் தொழில் புரிகின்றனர். அத்துடன் நூற்றுக்கணக்கான மீன்வியாபாரிகள் இந்தப்படகுகளை நம்பி வாழ்வதுடன் இன்னும் பல நூறுபேர் இவற்றில் பல்வேறு வழிகளிலும் முதலீடு செய்துள்ளனர்.

அத்துடன் வாகனேரிக்குளத்திற்கு மீன்பிடிக்கச்செல்லும் இருபதிற்கும் மேற்பட்ட படகுடமையாளர்கள் கப்பம் கோரப்பட்டுள்ளதோடு இன்னும் பல சிறு படகுடமையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே 27ம் திகதிய வன்முறைகளால் பாதிக்கப்பட்ட மொத்த மீனவக் குடும்பங்களின் எண்ணிக்கை சுமார் இரண்டாயிரத்தைத் தொடும்.

## (இ). விவசாய பொருளாதாரத்தின் மீதான தாக்குதல்கள்

அடிப்படையில் கல்குடாத் தொகுதி முஸ்லிம்கள் விவசாயப் பொருளாதாரத்தில் தங்கி இருந்தவர்களாகும். எனினும், கடந்த கால கசப்பான அனுபவங்களால் இப்பகுதி மக்கள் விவசாய முறைமையிலிருந்து மீன்பிடி, மற்றும் வியாபார செயற்பாடுகளில், தமது கவனத்தை செலுத்தத் துவங்கினர். எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தம், பிரபா-ஹக்கீம் கூட்டுடன்படிக்கை என்பவற்றின் பின்னர் மீண்டும் இம்முறை விவசாய செயற்பாடுகளின் மீது தமது கவனத்தை செலுத்தத் துவங்கினர். இந்நிலையில் 27ம் திகதிய வன்முறைகளின் பின் அவர்கள், தமிழ் ஆயுதபாணிகளால் விவசாயப் பகுதிகளிலிருந்து துரத்தப்பட்டு, பலத்த இழுபறிகளுக்குப் பின் மீண்டும் வயல்களுக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அனேக வயல் நிலங்கள் போதிய பராமரிப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கடுமையான பாதிப்பின் காரணமாக சுமார் 10 விவசாயிகள் தமது விவசாய நிலங்களை முற்றாக கைவிட்டுமுள்ளனர் இதனால் ஏற்பட்ட நட்டம் சுமார் பல இலட்சங்களாகும்.

* மொத்த விளைச்சல் வீழ்ச்சி அடையும்

* அனேக விவசாயிகள் கடன் மூலதனத்தை கொண்டவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால் எதிர்காலத்தில் தமது பெறுமதி வாய்ந்த சொத்துக்களை இழக்க வாய்ப்புள்ளது.

பொருளாதார மூலங்கள் தொடர்ந்தும் மாறி மாறி தாக்கப்படுவதனால் தொழில் விட்டு தொழில் மாறுவதிலுள்ள பல சிக்கல்களை தொழிலாளர்கள் சந்திக்கின்றனர். இதனால் உற்பத்தித் திறன் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிலர் புதிய தொழில்களை இனம் காண முடியாதுள்ளது. எதிர்கால முஸ்லிம்களின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும். தொழில் வாய்ப்பும் பாதிக்கப்படும்.

## சமூக உறவிலான தாக்கங்கள்

85,90களின்பின் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கட்டி எழுப்பப்பட்ட தமிழ், முஸ்லிம் உறவு இன்னும் பல வருடங்களுக்கு 27ம் திகதியின்பினரான நிகழ்வுகளினால்



படிப்பகம்

www.padippakam.com



பின்தள்ளப்பட்டுள்ளது. இந்த விரிசல் மிகப் பெரும் இழப்பாகும் என்பதுடன், இவற்றை மீண்டும் கட்டி எழுப்புவதற்குப் பதிலாக இன்னும் இதனை விரிவுபடுத்தத் தக்கவகையில் குறிப்பிட்ட குழுவினர் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்துவது தமிழ் முஸ்லிம் உறவை இன்னும் சிக்கல் படுத்துவதாகும்.

தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களும், மத சகிப்புத்தன்மை இன்மையும் எதிர்காலத்தில் இரு இனங்களினதும் உறவை மேலும் கேள்விக்குட்படுத்தலாம்.

## சமூக ரீதியான ஏனைய பாதிப்புக்கள்.

* தொடர்ச்சியான பொருளாதாரங்கள் மீதான தாக்குதல்கள் முஸ்லிம் சமூகத்தை பலவீனப்படுத்துவதுடன், ஆண்களின் பொருளாதார நடவடிக்கைகள் தாக்கப்படுவதும் ஆண்கள் கொலை செய்யப்படுவதும், பெண்கள் வெளிநாடு செல்லவோ, சிறுவர்கள் தொழிலுக்கு செல்லவோ வாய்ப்பை ஏற்படுத்தலாம். இதனால் சிறுவர்களின் கல்வி பாதிக்கப்படுவதுடன் சிறுவர்கள், பெண்களின் உரிமைகள் மீறப்படுவதுடன் குடும்ப, சமூக கட்டமைப்பும் பாதிக்கப்படும்.

* ஒரு சமூகத்தின் பொருளாதாரத்தை தொடர்ந்தும் தாக்குவதனால் அச்சமூகம் பலவீனப்படுவதுடன், அதன் மீதான உரிமை மீறல்களையும், தேவையற்ற அத்துமீறல்களையும், எதிர்த்து நிற்பதற்கான அதன் போராட்ட உணர்வையும் பலவீனப்படுத்தலாம். இதற்கான திட்டமும் தமிழ் மேலாதிக்க சக்திகளிடம் உள்ளது நன்கு தெளிவாகின்றது.

* முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது. வன்முறைகளைத் தொடர்ந்து முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட தமிழ் தரப்பு முயற்சிகள் இங்கு கவனிக்கத்தக்கது.

எனவே, 27 ம் திகதியினதும், அதன் பின்னருமான நிகழ்வுகள் இங்கு தொட்டுக்காட்டியவற்றின் மீதும், இன்னும் பல சமூகக் கூறுகள் மீதும் பல்வேறு விரும்பத்தகாத தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், விரிவான ஆய்வையும், தற்காப்பையும் வேண்டி நிற்கின்றது.

இனத்தீயின் நிறம்
கொடுத்த கரங்கள் வெந்தபோது
நீதியைக் கேட்டு நின்றன
ஹர்த்தால்
நெஞ்சில் உணர்வுகளை ஏந்திய
இளசுகள்
நொந்த மனங்களின்
கண்ணீர்களாக
அனைத்தும் தீயிடப்பட்டபோது
கடைகளும் பொருட்களும்
உயிர்களும் உடமைகளும்
சேர்ந்தே
கருமையாகியிருந்தன
சமூக இழப்புக்களாக.



படிப்பகம்

www.padippakam.com



## வாழைச்சேனையில் இடம்பெற்ற வன்முறைத்தாக்குதலால் உயிரிழந்தோர், காணாமல்போனோர் விபரம்

| பெயர் | பிறந்ததிகதி | அ.அ. இல | வதிவிடம் | தொழில் | குடும்ப எண்ணிக்கை | நிகழ்வின் தன்மை |
|---|---|---|---|---|---|---|
| 01. ஆதம்லெப்பை ஹாஜா முகைதீன் | 1963-07-08 | 631902774V | மீன்பிடி இலாகா வீதி. வாழைச்சேனை-4 | மீன்பிடி | 05 | கிரினைட் வீச்சினால் கொல்லப்படல் |
| 02. அப்துல் கபூர் சஹாப்தீன் | 1965-06-10 | 651622905V | வை.எம்.எம்.ஏ.வீதி வாழைச்சேனை.4 | மீன்பிடி | 05 | கிரினைட் வீச்சினால் கொல்லப்படல் |
| 03. முஹம்மது ஹனீபா முஹம்மது சலீம் | 1987-27-02 | - | மக்களவடி வீதி. வாழைச்சேனை.4 | மாணவன் | 06 | கிரினைட் வீச்சினால் கொல்லப்படல் |
| 04. ஹயாத்துமுஹம்மட் ஜனுதீன் முஹம்மட் | 1976-01-06 | 76006036V | ஆலிம் வீதி. வாழைச்சேனை.5 | கூலித்தொழில் | 05 | கடத்தப்பட்டு கொலை செய்யபபட்டு எரிக்கப்பட்டமை. |
| 05. ஹயாத்துமுஹம்மது ஜனுஸ்தீன் | 1982-07-07 | 821892562V | ஆலிம் வீதி. வாழைச்சேனை.5 | கூலித்தொழில் | 05 | கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டமை. |
| 06. முஹம்மது அன்வர் | 1982 | - | ஹைறாத் வீதி. ஓட்டமாவடி.01 | கூலித்தொழில் | 02 | துப்பாக்கிச் சூடு |
| 07. நெய்னா முஹம்மது அபூசாலி | 1969-08-06 | 671603095V | பாடசாலை வீதி. காவத்தமுனை. | மீன்பிடி | 03 | கடத்திச் செல்லப்பட்டமை. |
| 08. ஹயாத்து முஹம்மது முஹம்மது ஹுசைன் (ஜமால்தீன்) | 1958-08-25 | 582382972V | பாடசாலை வீதி காவத்தமுனை. | விவசாயம் | 04 | கடத்திச் செல்லப்பட்டமை. |



படிப்பகம்

www.padippakam.com



| பெயர் | பிறந்ததிகதி | அ.அ. இல | வதிவிடம் | தொழில் | குடும்ப அங். எண்ணிக்கை | நிகழ்வின் தன்மை |
|---|---|---|---|---|---|---|
| 09. முஹம்மது அபூபக்கர் ஹயாத்து முஹம்மட் | 1960-10-20 | 602945766V | பாடசாலை வீதி காவத்தமுனை. | மீன்பிடி | 05 | கடத்திச் செல்லப்பட்டமை. |
| 10. ஹயாத்து முஹம்மது கலீல் றஹ்மான் | 1980-02-28 | 800592712V | ஓட்டமாவடி-03. | தச்சர் | 07 | கடத்திச் செல்லப்பட்டமை. |
| 11. பஷீர் முஹம்மது அஜ்வத் | 1977 | - | பரிசாரியார் வீதி. ஓட்டமாவடி-03. | கூலித்தொழில் | 03 | கடத்திச் செல்லப்பட்டமை. |
| 12. இஸ்மாயில் பரீட் | 1973.1025 | - | எம்.பீ.சீ.எஸ். குறுக்கு வீதி. ஓட்டமாவடி | கூலித்தொழில் | 04 | கிரனைட் தாக்குதல் |



படிப்பகம்

www.padippakam.com



## 2002, ஜூன் 27ஆந் திகதி
## வாழைச்சேனை இனப்படுகொலையில் ஷஹீதாக்கப்பட்டவர்கள்











எரிக்கப்பட்டோர்

ஜனூஸ்தீன்
(வாழைச்சேனை)



எரிக்கப்பட்டோர்

ஜனுதீன்
(வாழைச்சேனை)



படிப்பகம்

www.padippakam.com



# முஸ்லிம்களுக்கெதிரான தமிழ் ஊடக பயங்கரவாதமும் உண்மை நிலையும்

கடந்த 2002 ம் ஆண்டு ஜூன் மாத நடுப்பகுதியில் மூதூரில் இடம் பெற்ற இனக்கலவரம், ஜூன் 27, 28, 29ஆந் திகதிகளில் வாழைச்சேனை மற்றும் கல்குடாத் தொகுதியின் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் தொடர்பாக தமிழ் செய்தி ஊடகங்கள் நடாத்திய பொய்ப்பிரச்சாரங்கள் முஸ்லிம்கள் மீதான இரண்டாவது ஆக்கிரமிப்பு என்றே நாம் கருத வேண்டியிருக்கின்றது.

நவீன உலகை செய்திகளே ஆள்கின்றன. செய்திகள் கட்டமைக்கும் புனைந்துரைகள் மூலமாகவே இன்று ஒவ்வொரு மனிதனும் புதுப்பிக்கப்படுகின்றான்: அல்லது கட்டமைக்கப்படுகின்றான்.

தற்கால முஸ்லிம் உலகை சிதைப்பதற்கான பிரதான ஆயுதங்களாக இன்று சர்வதேச ஊடகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இந்தப்பின்னணியில் கிழக்கு முஸ்லிம்களது உரிமைக்குரலை நசுக்குவதற்கு தமிழ் பேரினவாதத்திற்கு தலைமை தாங்கும் பாஸிச ஆயுதக் கும்பலின் அக்கிரமங்களுக்கு சற்று குறையாத பங்களிப்பை தமிழ் ஊடகங்கள் வழங்கி வருகின்றன. இதில் விடுதலைப் புலிகளின் தமிழ் நெட் இணையத்தளம் உட்பட வீரகேசரி, தினக்குரல், சுடர் ஒளி, மற்றும் சக்தி வானொலி, தொலைக்காட்சி, பீ.பீ.சி. தமிழோசை, வெரித்தாஸ்,ஐ. பி. எஸ். வரிசையில் இன்னும் பல தமிழ் செய்தி ஊடகங்களும் முஸ்லிம்களுக்கெதிரான விஷயத்தோடு விசத்தையும் கக்கி எழுதுகின்றன: ஒலி, ஒளி பரப்புகின்றன.

ஊடகத்துறையில் இன, மத வேறுபாட்டுக்கப்பால் உண்மையை நேர்மையாகச் சொல்வதும், அதனை மறைக்காதிருப்பதும், பொய்யைப் பரப்பாதிருப்பதும் செய்தி ஊடக ஒழுக்கத்தின் அடிப்படையான கோட்பாடாகும். இவை ஏனோ முஸ்லிம்கள் விடயத்தில் தலைகீழாக மாறி மிகவும் வெட்கப்படத்தக்க, கீழ்த்தரமான, அநீதியான முறையில் வக்கிரத்தனத்தோடு செய்திகள் என்ற பெயரில் பொய்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. போரட்ட அமைதிச் சூழலிலே மூதூர், வாழைச்சேனை கலவரங்களின் மூலமாக தமிழ்ப் பேரினவாதம், முஸ்லிம்களது வாழ்வு, இருப்பு,கலாசாரம், பொருளாதாரம், உரிமை என்பவற்றின் கழுத்தை, தனது ஆயுத மேலாதிக்கத்தைக் கொண்டு இறுக்கி வைத்திருக்கின்றது. அது மட்டுமல்லாது கடலில் மீன்பிடியும், காட்டிலே விவசாயமும், நாட்டிலே வர்த்தகமும் சுதந்திரமாக இயங்க விடாது செய்ததன்மூலம் முஸ்லிம்களை, பொருளாதாரத் தடைக்குட்படுத்தி வதைத்து வருகிறது.

இது தவிர முஸ்லிம் மக்கள் தமக்கெதிரான இன ஒடுக்குதலுக்கெதிராக ஹர்த்தால் மூலம் சாத்வீகமான முறையில் எதிர்ப்பு காட்டியதன் விளைவாக 13 உயிர்கள் பலியானதும், 63 பேர் காயமடைந்ததும், 100க்கும் மேற்பட்ட கடைகள் எரிக்கப்பட்டும், கொள்ளையிடப்பட்டும், சேதமாக்கப்பட்டும், 1500 ஏக்கர் விவசாயமும், மற்றும் கடற்றொழிலும் பாதிக்கப்பட்டு, ஆயுதங்களால் அடக்கப்பட்டிருந்த நிலையில் - 'மரத்தில் இருந்து வீழ்ந்தவனை மாடேறி மிதித்துச் சிதைத்த கதையாய்' ஊடகங்களும் தமது பங்கிற்கு செயற்படுகின்றன.

இனக் கலவரத்தில் இரு தமிழர்கள் கொல்லப்பட்டு 10 க்கும் மேற்பட்ட தமிழர்கள் காயப்பட்டும், 16 தமிழர்களுக்குரிய கடைகள் எரிக்கப்பட்டிருந்தபோதும், ஒப்பீட்டு



படிப்பகம்

www.padippakam.com



அடிப்படையில் 80 சதவீதமான பாதிப்பும் முஸ்லிம்களுக்குரியதென்பதே உண்மையாகும். ஆனால் எந்தத் தமிழ் ஊடகமும், (தினமுரசு தவிர) இதனை நேர்மையாகப் பேசவில்லை.

தமிழ்ப் பேரினவாத ஆயுதங்கள் முஸ்லிம்களை அடக்கி, ஒடுக்கி வைக்கும் உபாயத்தைக் கையாண்டு வருகின்ற நிலையில், நடைபெற்ற கலவரங்களைக் காட்டி, பேரினவாத ஊடகங்கள் முஸ்லிம்கள் பற்றி சர்வதேசத்தின் முன் பின்வரும் நிறுவல்களை முன்வைத்தன.

* முஸ்லிம்கள் சமாதான விரோதிகள்

* முஸ்லிம்களில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் உள்ளனர்.

* முஸ்லிம்கள் கட்டுப்பாடற்ற சமூகத்தினர்.

* சமாதானத்திற்கு எதிராக செயற்படுவதனால் முஸ்லிம்கள் அடிப்படைவாதிகள்

* அல்லது ஒரு தேச விரோத சக்திகள்.

* முஸ்லிம்களிடம் ஏகமனதான ஒரு தலைமையில்லை.

* முஸ்லிம்கள் கட்டுப்பாடற்ற முறையில் அரசியல் ரீதியாக பிளவுண்டு கிடப்பவர்கள்.

* முஸ்லிம்கள் போராட்ட காலத்தில் இலாபமடைந்த சமூகத்தினர்.

இந்தக் கருத்துக்களை வழியுறுத்துவதற்காக தினக்குரல், வீரகேசரி பத்திரிகைகளில் எமது மாவட்டத்தைச் சேர்ந்த ஜி. நடேசன், ஜெயானந்தமூர்த்தி உட்பட தமிழ் பேரினவாத எழுதுகோல்கள் பக்கம் பக்கமாக எழுதின.

செய்திகள் திரித்துக் கூறப்பட்டன. முஸ்லிம்களது இழப்புக்களைப் பற்றி தமிழ் பத்திரிகைகளில் விபரம் தரப்படவில்லை. உண்மைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன முஸ்லிம்களால் முன்வைக்கப்படும் நியாயங்கள் பிரசுரிக்கப்படுவதே இல்லை. பொய்கள் பிரச்சாரப்படுத்தப்பட்டன. இந்த வகையில் கடந்த 27-06-2002 புலிகளின் தமிழ்நெட் இணையத்தளத்தின் பொய்களை நோக்க முடியும்.

* வாழைச்சேனை கலவரத்தில் புலிகளுக்கு எந்தவிதத் தொடர்புமில்லை.

* வாழைச்சேனை, ஓட்டமாவடிப் பகுதிகளில் 10 தமிழ் பெண்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

* 4 வயது சிறுவன் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டான்.

இதில் 10 தமிழ் பெண்கள் கடத்தப்பட்டது, சிறுவன் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டது ஆகிய இரு செய்திகளும் அப்பட்டமான பொய்கள் என்பது தற்போது நிருபிக்கப்பட்டுள்ளது. அதனைக் கடந்த 12.07.02 ஆந் தேதி மூக்கர்கல் என்ற இடத்தில் கிழக்கு மாகாண இராணுவப் பொறுப்பதிகாரி சுனில் தென்னக்கோன், புலிகளின் கிழக்கு மாகாணச் சிறப்பு அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன், மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஐனாப். அலி சாஹிர் மௌலானா ஆகியோர் தலைமையில் முஸ்லிம் விவசாயிகளின் பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்ட சமாதானக் கூட்டத்தில் பத்து தமிழ்ப் பெண்கள் கடத்தப்பட்ட, சிறுவன் வாளால் வெட்டப்பட்ட செய்திகள் தவறானவை என்பதை திரு. கரிகாலன் பகிரங்கமாக ஏற்றுக் கொண்ட



படிப்பகம்

www.padippakam.com



போதும், அப்பிழைக்கான மறுப்பையோ அல்லது வருத்தத்தையோ இதுவரை அவர்கள் வெளியிடவில்லை. இது அவர்களது திட்டமிட்ட ஊடக பாஸிசம் என்றால் மிகையில்லை.

இவ்வாறான ஊடக பாஸிஸம் மூலம் பொய்யான திட்டமிட்ட புனைந்துரைகளை முதன் முதலில் புலிகளின் தமிழ் நெட் இணையத்தளமே, சர்வதேசமெங்கும் பரப்பியது. இதன் மூலம் பொய்யைப் பரப்பியதற்கு புலிகளே வழி கோலினர்.

அதே நேரம் இக் கலவரங்களுக்கும் புலிகளுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பது எவ்வளவு தூரம் பொய்யானதென்பது, அன்று ஹர்த்தாலைக் குழப்பியது... தமிழ் சிவிலியன்களுக்கு ஆயுதம் வழங்கியது... நவீன முறையில் முஸ்லிம் சிவிலியன்கள் மீது தாக்குதல் நடத்தியது...., இரு புலிகள் உயிரிழந்தது என்பவை மூலம் நிரூபணமாகியுள்ளது. பொலிஸ் அறிக்கை மூலமாகவும் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர, புலிகள் தலைமையேற்று நடாத்திய கொடுமைகளான, முஸ்லிம்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டமை, 02 ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டமை, கடைகள் தீயிடப்பட்டமை என்பவற்றை மூடி மறைத்துவிட்டு, கலவரத்தை சமாதானத்தை விரும்பாத தீய சக்திகளே செய்தன என பொதுப்படையாக பூசி, மெழுகி, எழுதுவதன் மூலம் புலிகளை தூயவர்களாகச் சித்தரிக்கும் கைங்கரியத்தை தமிழ் ஊடகங்கள் மேற்கொள்கின்றன.

இது தவிர, முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்களையும், காயமடைந்தவர்களையும் முஸ்லிமென தெளிவாக அறிந்த போதும், அதனை அவ்வாறு அடையாளப்படுத்தாது மூடி மறைத்தும், அவற்றை தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளாக சித்தரித்தும் தமிழ் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வந்தன.

முடிவாக, தமிழோசை (புலியோசை) மற்றும் தமிழ் செய்தி ஊடகங்கள் அப்பட்டமாக தமிழ் பேரினவாதத்திற்கு கொடி தூக்கும் கேவலத்தை எதிர்காலத்திலும் தொடர்ந்து செய்யப் போகின்றன.

இந்த இடத்திலிருந்தே முஸ்லிம்களுக்கான ஒரு நாளிதழ் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பற்றி பொறுப்பு வாய்ந்தவர்கள் சிந்திக்க வேண்டும்.

## பாலை நகர் முஸ்லிம்கள்:
## புலிகளின் மற்றுமொரு வெளியேற்றம்

கல்குடாத் தொகுதியின் முஸ்லிம் எல்லைக் கிராமங்களாக காவத்தமுனை, காரமுனை, கிருமிச்சை, கள்ளிச்சை, மதுரங்குளம், வெள்ளாமைச்சேனை உச்சவடக்கல், கேணிநகர், பாலை நகர், தியாவட்டவான், நாவலடிச்சந்தி, ஊறுகாமம் போன்ற சிறு சிறு முஸ்லிம் கிராமங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறான முஸ்லிம் எல்லைக் கிராமங்களில் மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில் ஓட்டமாவடிக்கு வடமேற்காக சுமார் 1 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் பாலைக்காட்டு வெட்டை (பாலை நகர்) அதிமுக்கியமானது.

இது சுதந்திரத்திற்கு முற்பட்ட பூர்வீக வரலாற்றினையுடையது. தமிழ்-முஸ்லிம் ஆகிய இரு சமூக அமைப்புக்களைக் கொண்டு விளங்கும் இக்கிராமமானது கல்குடாத்



படிப்பகம்

www.padippakam.com



தொகுதி முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியங்களுக்கும் முக்கிய கால்கோளாகவும் விளங்குகின்றது.

பாலைநகர் சுமார் 70 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. மயிலங்கரச்சைப் பகுதியிலும், 60 ஏக்கரளவில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் உள்ளன. இவைகளை வைத்து ஒட்டு மொத்தமாக நோக்குகின்றபோது பாலை நகரில் ஏறத்தாழ 130 ஏக்கர் காணியில் முஸ்லிம்கள் வசித்திருக்கிறார்கள் என்பதும் புலனாகிறது. பாலை நகர் மேற்கு, தெற்கு,கிழக்கு, வடக்கு எல்லைகளாக முறையே தாண்டியடி வீதி, கோயில் வீதி, நாசிவன்தீவு வீதி, மூதூர் வீதி என்பன விளங்குகின்றன.

பாலை நகரில் 1948களில் ஒரு பூரண குடியேற்றம் நிலவுவதற்கான சாத்தியப்பாடு நிலவத் தொடங்கியது. 1950 களுக்குப் பிறகு அச்சாத்தியப்பாடு செயல்வடிவம் பெறுகிறது. 1957ம் ஆண்டு அது ஒரு உத்தியோகபூர்வக் குடியேற்றக்கிராமமாக மாற்றம் பெறுகின்றது. 1960 – 1970களுக்கு இடைப்பட்ட பத்தாண்டு காலப்பகுதிக்குள் சுமார் 173 குடும்பங்கள் பாலை நகரில் குடியேறி இருந்தன. இதனையடுத்து வந்த காலப்பகுதியில் குடியேற்ற ரீதியிலும், தொழில் ரீதியிலும் பாலை நகர் பரிணாம வளர்ச்சியைக் கண்டுவந்தது.

1985ஆம் ஆண்டு வரைக்கும் 250 முஸ்லிம் குடும்பங்கள் இங்கு குடியேறியிருந்தன. ஒரு முஸ்லிம் கிராமம் என்ற அடிப்படையில் ஒரு தன்னிறைவு பெற்ற கிராமமாக பாலைநகர் 15 ஆண்டுகளே விளங்கி நின்றது.

1985 களில் தமிழ் சிங்கள இனப் பிரச்சினை கூர்மையடையத் தொடங்கி இருந்தது. இதனால் பாலை நகர் முஸ்லிம்களுக்கும் பாதுகாப்புச் சிக்கல்களும், தம் வாழ்க்கையினை முன்னெடுத்துச் செல்வதில் முட்டுக்கட்டைகளும் ஏற்படத் தொடங்கின.இதனால் பாலைநகர் முஸ்லிம்கள் அனைவரும் தமது பாதுகாப்புக்கருதி கிராமத்தை விட்டும் வெளியேற வேண்டிய துரதிஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

1985 – இதுதான் பாலைநகர் முஸ்லிம்களால் மறக்கமுடியாத ஆண்டு. முதன் முலாக இந்த ஆண்டுதான் அவர்கள் கிராமத்தை விட்டும் வெளியேறி செவனபுர, கட்டுவன்வில போன்ற பகுதிகளுக்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். ஆயினும் இந்நிலை நீடிக்கவில்லை. ஊரில் கடும் பதற்ற நிலை குறைந்து, ஓரளவான அமைதிச் சூழல் 1986ல் உருவாகியிருந்தது. இதனால் 1985ம் ஆண்டில் பாலைநகரிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் 151 முஸ்லிம் குடும்பங்கள் மீண்டும் 1986ல் மீளக் குடியேறத் தொடங்கினர்.

1987 உடன் இந்திய அமைதி காக்கும் படையினரின் கெடுபிடிகள் கூர்மை அடைந்ததனையடுத்து, கிழக்கை விட்டு வடமத்திய மாகாணம், பொலநறுவைக்கு இடம்பெயர்ந்து சென்ற 14000 மக்களுடன் இவர்களும் இணைந்து கொண்டனர். இதனையடுத்து மீண்டும் 1989ல் 172 குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர். இம் மீள்குடியேற்றம் கூட தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை.

1990ல் புலிகளால் நிகழ்த்தப்பட்ட பாசிச நடவடிக்கைகள் மற்றும் பொலிஸ் சுற்றிவளைப்பு என்பவைகளால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் மீண்டும் வெளியேறிச் செல்லவேண்டிய நிர்ப்பந்த சூழல் இம் முஸ்லிம்களுக்கு உருவாகியது.

இவ்வாறு 1990ல் வெளியேறிய முஸ்லிம்கள் 1993ல் மீளவும் குடியேறினர். இதில் 144 குடும்பங்கள் குடியேறின. ( இம் மக்களின் மீள் குடியேற்றம் பற்றி பேசுவதற்காக



படிப்பகம்

www.padippakam.com



செல்லும் போதே, 1992 -12 -26ம் திகதி அன்று மீயாங்குளச் சந்தியில் வைத்து மட்டு மாவட்ட அரச அதிபரும் எழுத்தாளருமான வை. அஹமத் அவர்களும், உதவி அரசாங்க அதிபர் ஏ. கே. உதுமான், சட்டத்தரணி எம். பி. எம். முஹிதீன், பாடசாலை அதிபர் எஸ். ஏ. மஹ்மூத், சாஹுல் ஹமீத் ஷஹிதாக்கப்பட்டனர். இவர்களோடு சாரதி மகேந்திரனும் கொல்லப்பட்டார்.) இம் மீள் குடியேற்றமும் தொடர்ந்து நிலைக்கவில்லை.

1993இன் பிற்கூறில் பாலை நகருக்குள் புகுந்த புலிகள், அங்கிருந்த முஸ்லிம்கள் அனைவரையும் விரட்டியடித்தனர். இதன் காரணமாக உடைமைகளையும், உரிமைகளையும் இழந்த பாலை நகர் மக்கள் பதற்றத்துடன் வெளியேறினர். இதுவே பாலைநகர் முஸ்லிம்களை புலிகள் விரட்டியடித்த முதல் நிகழ்வாகும். இவ்விரட்டியடிப்பினால் வெளியேறிய முஸ்லிம்கள் பல இடங்களிலும் அகதிகளாய் தஞ்சம் புகுந்தனர். இவ்வகதி வாழ்க்கையிலிருந்து விடுபட எண்ணிய முஸ்லிம்கள் மீண்டும் பாலை நகரில் குடியேறுவதற்கான விருப்பைக் கொண்டிருந்தனர்.

இவ்வேளையில்தான் சரீரம் நிறுவனம் முஸ்லிம்களை மீண்டும் பாலைநகரில் குடியமர்த்த முன்வந்தது. 1997ம் ஆண்டு பாலை நகரில் 7000 பெறுமதியான குடிசைகளை 100 குடும்பங்களுக்கு அமைத்துக் கொடுத்தது. தகவலறிந்த புலிகள் உடனடியாக பாலைநகருக்கு வந்து முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்று கூட்டி, மூன்று நாள்கள் அவகாசம் தந்து எழும்பிப் போகும்படி அச்சுறுத்தல் விடுத்தனர். இது புலிகளின் இரண்டாம் கட்ட விரட்டியடிப்பாகும்.

இதன் பிறகு, 1999ல் முன்னாள் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியின் காரணமாக 25 குடும்பங்கள் பாலை நகரில் மீளக் குடியேறின. இவர்கள் ஆடு, மாடு வளர்ப்பு, செங்கல் வாடி, வேளாண்மை போன்ற பொருளாதார முயற்சிகளில் ஈடுபட்டனர். இக்குடியேற்றம் கூட 2002ம் ஆண்டு வரைதான் நிலைத்திருந்தது.

2002-07-14ம் திகதியன்று கணக்கன் சின்னத்தம்பி என்பவரின் தலைமையில் பாலைநகருக்குள் புகுந்த புலிகள் குழு ஒரே இரவுக்குள் பாலை நகர் கிராம முஸ்லிம்களை வெளியேறும்படி அச்சுறுத்தல் விடுத்தது. இந்த உயிர் அச்சுறுத்தலையடுத்து முஸ்லிம்கள் மறுநாள் காலையே வெளியேறினர்.

இவ்வாறாக புலிகளின் திட்டமிட்ட வெளியேற்றங்களினால், முஸ்லிம்கள் அதிகமான சொத்து இழப்புக்களை எதிர் கொண்டனர். அடிக்கடி நிகழ்ந்த இந்த வெளியேற்றங்களினால் பாதிக்கப்பட்ட பாலைநகர் முஸ்லிம்களை எந்த அரசாங்கமோ, அரசியல் தலைவர்களோ கண்டு கொள்ளவில்லை. அவர்களின் பொருளாதார, உயிர் இழப்புளுக்கு எந்த இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. அவர்களுடைய பிரச்சினைகள் அலசி ஆராயப்பட வேண்டியவையாகவே இருந்த போதிலும் அவை உதாசீனப்படுத்தப்படும் நிலையிலேயேயுள்ளது.

முஸ்லிம்களின் விடயத்தில் புலிகள் கொண்டுள்ள நிலைப்பாடு வடக்கு மாகாண முஸ்லிம்கள், காத்தான்குடி, ஏறாவூர், கல்குடா, விசேடமாக பாலை நகர் முஸ்லிம்கள் போன்றவர்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டும் இதுவரை யாரும் கண்டு கொள்ளாமல் இருப்பது விசனத்துக்குரியதாகும்.

அத்துடன் பாலைநகரில் ஆரம்பந்தொட்டு இற்றை வரைக்குமான குடும்பங்களின் எண்ணிக்கை 250க்கும் அதிகமாகும். ஆயினும் இது மிகத் தெளிவாகத் திட்டமிட்டு 144 என இப்பகுதி கிராம சேவையாளரான சாமித்தம்பி என்பவரால் குறைக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



பாலைநகர் முஸ்லிம்களின் அண்மைய வெளியேற்றம் ஒரு தற்செயல் நிகழ்வு, அது 27.06.02 அன்றைய ஹர்த்தால் அனர்த்தத்தின் பிரதிபலிப்பு என வாதிப்பவர்களுக்கு முந்தைய வெளியேற்றங்களும், சனத்தொகைக் குறைப்பும், இது புலிகளின் மிக நீண்ட நாள் திட்டமிடப்பட்ட செயல் என்பதை மிகத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

மேலும் இக்கிராமம் கோறளைப்பற்று (வாழைச்சேனை), கோறளைப்பற்று வடக்கு (வாகரை) முஸ்லிம்களை இணைக்கும் கோறளைப்பற்று மத்திய பிரதேச செயலகத்தின் இதயமாக (இணைப்புப் பகுதியாக) காணப்படும் கேந்திர தன்மை வாய்ந்த புவியியல் அமைப்புத்தான் இதன் அனர்த்தங்களுக்கு பிரதான காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

பாலைநகர் முஸ்லிம்களின் பிரச்சினைகளும், அவலங்களும் சகலரின் காதுகளையும், கண்களையும், மனச்சாட்சிகளையும் சென்றடைய வேண்டுமென்பதே பாலை நகர் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு, ஆனால் இவர்கள் தங்களின் பிரச்சினையை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பதில் பல சிக்கல்கள் உருவாகின.

ஆயினும் அண்மைய விரட்டியடிப்பு முன்னைய விரட்டியடிப்புக்கள் போலவும், கிழக்கின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற வெளியேற்றங்களைப் போலவும் மறக்கப்பட்டு விடக் கூடாது, அது உலகின் காதுகளைச் சென்றடைய வேண்டும் என்ற உடனடிச் சிந்தனையின் ஈராக, தாங்கள் அனைவரும் அகதிகளாக அந் நூர் தேசிய கல்லூரியில் தஞ்சம் புகுவதாக முடிவெடுத்து தற்போது அகதிகளாக வாழைச்சேனை அந் நூர் தேசிய கல்லூரியில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதுதான் இவ் வெளியேற்றங்கள் குறித்த பார்வையும், முஸ்லிம்கள் குறித்த புலிகளின் நிலைப்பாடும் முஸ்லிம்களுக்கு படிப்படியாகத் தெரிய வருகிறது. இந்நிலையில் இன்று எல்லைக் கிராமமான பாலை நகருக்கு ஏற்பட்ட சதி, நாளை ஏனைய முக்கிய முஸ்லிம் பகுதிகளுக்கும் நிகழாது என்பதில் என்ன நிச்சயம்...?

## பள்ளிவாயல்களைத் தாக்குவது புலிகளின் இலக்கில் இருந்தே வருகிறது

எல்லைப்புற கிராமங்களில் இருக்கும் முஸ்லிம்களை விரட்டியடிப்பது, அதன் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளை உடைப்பது, தொழுகையில் ஈடுபடுகின்றபோது உயிர்களை சுட்டுக்குவிப்பதெல்லாம் புலிகளின் புதிய செயற்பாடன்று. அவர்களிடம் தொடர்ந்தேச்சியாக இருந்து வரும் விடயங்கள்தான்.

அந்த வகையில்தான் கடந்த 27-07-2002 அன்று வியாழக்கிழமை வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளியை புலிகளும், தமிழ்தீவிரவாதிகளும் தாக்க எத்தனித்தனர். ''பள்ளியை தாக்கப்போகிறார்கள் ஜமாஅத்தார்கள் அல்லாஹ்வின் மாளிகையை பாதுகாக்க வாருங்கள்'' என்று பி.ப. 5.45 மணியளவில் அறிவிக்கப்பட்டபோது ஊர் ஜமாஅத்தார்கள் பள்ளியை நோக்கி விரைந்தனர். பள்ளியை நோக்கி எறிந்த குண்டுகளே பல உயிர்களை கேட்டுச் சென்றது. ஆதம்லெப்பை ஹாஹா முகைதீன், அப்துல் கபூர் சஹாப்தீன், அன்வர் உட்பட ஸஹீதானவர்கள் அனைத்தும் தங்களது வீட்டிலே இருந்து, ஜும்ஆப் பள்ளியை பாதுகாக்க ஓடி வந்தவர்கள்தான். அவர்களின் ஈமானிய முனைப்பு, ஜும்ஆப் பள்ளிக்கு ஆபத்து இன்றிப் போயிற்று.

மறுநாள் வெள்ளிக்கிழமை 28-07-2002 பேரினவாத சதி செம்மண்ணோடை 'குபா' பள்ளியைத் தாக்குவதாக அமைந்திருந்தது. ஜும்ஆத் தொழுகைக்காக மக்கள்



படிப்பகம்

www.padippakam.com



பள்ளியினுள் நிறைந்திருந்தனர். ஏதும் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் ஒரு சில சகோதரர்கள் தகவலை அறிவிக்க முற்காப்பாக எல்லை வீதியில் நின்றனர்.

பள்ளியை இலக்கு வைத்துத்தாக்க முன்வந்த புலிகள், கைக்குண்டுகளை வீசினர். அதில் காயமடைந்த முபாறக் என்பவர் பின்னர் கண்டி ஆஸ்பத்திரியில் ஸஹீதானார். மற்ற எட்டுப்பேரும் படுகாயம் அடைந்து பொலநறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். புலிகளின் திட்டத்திலிருந்து பள்ளியும் முஸ்லிம்களின் பெருந்தொகையினரும் அல்லாஹ்வின் உதவியால் பாதுகாக்கப்பட்டனர்.

ஒரு சமூகத்தை அழித்துவிடுவது இரண்டு வகையில் அமையமுடியும்,

ஒன்று உயிருடன் கொன்றொழிப்பது. மற்றது அவர்களின் சமய, பண்பாட்டு கலாசாரங்களை (கொள்கையை) அழித்துவிடுவது.

இது இஸ்லாமிய சிந்தனையாளர்களின் சமூக அழிவு பற்றிய கூற்றாகும். இந்த இரு பாங்கிலான அழிவையும் பாஸிசப் புலிகள் செய்தே வருகின்றார்கள். பொதுவாக பிற சமூகத்தின் சமயத்திற்கு மதிப்பளிப்பது, மத ஆலயங்களை உயிரிலும் மேலாக கருதுவது என்பன ஒவ்வொரு மதமும் வலியுறுத்தும் கடமையே. புலிகளைப் பொருத்தமட்டில் வரலாறு நெடுக இவை மீறப்பட்டே வந்திருக்கிறது. பள்ளிகளில் தொழுகையில் ஈடுபடும் வேளையில் புகுந்து சுடும் சாதனையில் உலக யுத்த வரலாற்றில் புலிகளே முதலிடம் பெறுகின்றார்கள்.

1990 களில் காத்தான்குடி பள்ளிவாயலில் நடாத்தப்பட்ட மனித வேட்டை தொடக்கம் மூதூர், வாழைச்சேனை சம்பவம் தாங்கும் பின்னணி வரை பள்ளிகளை குறிவைக்கும் நிலை இருந்தே வருகின்றது. ஏறாவூர் படுகொலை சம்பவம், பள்ளியகொட, அழிஞ்சிப்பொத்தானை அடங்கலான பல முஸ்லிம் கிராம படுகொலை போன்ற தாக்குதல்களின்போது புலிகள் திட்டமிட்டு அங்குள்ள பள்ளிகளையும், உள்ளே வணக்கத்திலீடுபட்டிருந்த முஸ்லிம்களையும் அழிவுக்குட்படுத்தியே வந்திருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் ஒரு கொள்கை சார்ந்த சமூகம். அவர்களை இனம், மொழி, தேசம் என்று பிரித்துப் பார்க்க முடியாது. தங்களுக்கான தனித்துவ கலாசார பெறுமானத்தை பாதுகாக்க முனைபவர்கள் அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் வேண்டி நிற்பவர்கள். இவற்றுக்கு தீங்கு விளைவிப்பவர்களை அவர்கள் அங்கீகரிக்கப் போவதுமில்லை. பார்த்துக்கொண்டு இருப்பவர்களுமில்லை. முஸ்லிம்களை பொருத்தமட்டில் மற்றவர்களின் சமயங்களை, ஆலயங்களை மதிப்பவர்கள், அவர்களின் போராட்ட உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்கள் அல் குர்ஆனும் அதைத்தான் விரும்புகிறது.

ஆனால் மத உணர்வுகளைத் தூண்டிவிடும் வேலையில்த்தான் அண்மைக் காலத்தில் புலிகள் தரப்பினர் முனைப்போடு செயற்படுகிறார்கள். வாழைச்சேனைக் கலவரத்தின் பின்னர், தங்களது வயல் காணிகளை பார்க்கச் சென்ற ஹாஜிகளுக்கு "தொப்பியை கழற்றுடா சோனி" என்ற வார்த்தைப் பிரயோகங்கள் எதைக் காட்டுகின்றன.? இவையெல்லாம் சத்தியத்திற்கெதிரான போரட்டம் என்பதை தெளிவாக்கும் விடயங்கள்.

வட புல முஸ்லிம்களின் வெளியேற்றம் எதைக் புலப்படுத்துகின்றது? மதம் என்ற போர்வையில் கிறிஸ்தவத்தை தாராளமாக உள்வாங்கிய புலிகள், இஸ்லாத்தை மதமாக கொண்ட முஸ்லிம் சமூகத்தை ஏன் உள்வாங்கத் தவறியது. சத்தியத்திற்கெதிரான பின்புலம் இருந்து வருவதையே இவை காட்டுகின்றன.




படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாண சோனகத் தெருவில் தாக்கப்பட்ட பள்ளிவாயல் மட்டுமன்று, எல்லைப்புற கிராமங்களில் குடியிருந்த மக்கள் விரட்டப்பட்டதன் பின் பல பள்ளி வாயல்கள் உடைத்து நாசமாக்கப்பட்டன. புலிகள் ஏன் பள்ளிகளை தாக்குவதில் மையம் கொள்கிறார்கள் என்றால், முஸ்லிம்கள் மத்தியில் மத எதிர்ப்புணர்வை தூண்டிவிட்டு, முஸ்லிம்கள் 'மதவெறியர்கள்' என்ற, மேற்கின் போலி முத்திரையைக் குத்திவிடுவது, குறித்த நேரத்தினுள் கூடிய சேதத்தினை விளைவிக்க பள்ளியில் தொழுகைக்காக கூடும் வேளை தாக்கியழிப்பது. இவையெல்லாம் முஸ்லிம்களின் உணர்வுகளை தீயிலிட முனையும் புலிகளின் செயல்கள் எனலாம்.

புலிகள் கிறிஸ்தவ பயங்கரவாதத்தை முஸ்லிம்கள் மீது கட்டவிழ்ப்புச் செய்கிறார்களா? ஆர் .எஸ்.எஸ். இன் இலக்கு புலிகளின் ஊடாக முஸ்லிம்களை நோக்குகின்றதா? என எண்ணுவதில் தவறென்ன உண்டு.



ஷஹீதானவர்களின் உடலங்கள் புனித அடக்கத்திற்காக வைக்கப்பட்டிருந்தபோது...



படிப்பகம்

www.padippakam.com



*நாக்கற்றவர்கள் நாங்கள்*
*நாக்கற்றவர்களால் யாது பயன்*


– நிசார் கப்பானி –

## குரல் வளையை நசுக்குதலும் சுதந்திரம் பற்றிய பாடலும்.

இனியும் – நீ
நாய்க்கிடும் அளவிலான
ஒரு சிறு ரொட்டித் துண்டையாகிலும்
என்னிடமிருந்து
பறித்துச் செல்வதனை
தடுப்பதன் பெயரால்
உலகின் முன்
நான்
எனது சுதந்திரத்திற்கான பாடலை
பாடித்திரிவேன்.

உயர்ந்த மரங்களில்
ஏறிநின்றும்,
உனது வீட்டுப் படிக்கட்டுக்களில்
பூக்கல் துவாரங்களில் எல்லாம்
குந்திக்கொண்டும்,
இன்னும்
கதவின் இடுக்குகளுக்கிடையிலும்
ஜன்னலின் விளிம்புகளுக்கிடையிலும்
உனது செவிப்பறை வெடித்து
ரெத்தம் ஒழுக மட்டும்
சுதந்திரம் பற்றிய
எனது பாடலை
உரத்துப் பாடுவேன்.

மேலும் எப்போதும்
நடு நிசியில்
உனது ஊர்த்தெருக்களில் எல்லாம்
உனது தியாகிகளின் மயானங்களில்
வந்து நின்று
விவஸ்தையே இல்லாமல்
உனதின் பாசிசம் பற்றியதான
பாடலை
பாடித்திரிவேன்
உனதின் தூக்கத்தைக் கெடுத்து





படிப்பகம்

www.padippakam.com



இன்னும் நான் பாடுவேன்
நாறிப்போன
உனது பல்லிடுக்குகளுக்கிடையிலும்
கோரை நகங்களுக்கிடையிலும்
ஒட்டிக் கொண்டுள்ள
எனதின் மாமிசத்துண்டுகளின்
பெயரால்.

எனினும் - இப்போ
உனது புல்ளெட்டுக்களிலோ
முஃமினின் ரெத்தம் தோய்ந்த
உனது வாள் முனையினிலோ
எனக்கான மரணம்
எனது இறைவனால்
எழுதப்பட்டிருக்கலாம்.
இருந்தும் - நான்
பயமின்றி
காற்றின் திசைகள் எங்கிலும்
எனது பாடலை
பாடித்திரிவேன்.



இன்னும் துயரம் தோய்ந்த
இந்த நாட்கள் சாட்சியாக - நீ
எரித்த மையித்துக்கள்
கடைத்தெருக்கள்
உடைத்த மஸ்ஜிதுக்கள்
சிதைத்த உறவுகள்- என
பட்டியலிட்டு அலுத்துப்போகிற
எல்லாம் பாடுவேன்
எனது நாக்கின்
ஒரு துண்டையாகிலும்
நீ
சிதைக்காதிருந்தால்...



படிப்பகம்

www.padippakam.com



# கடந்த 27.28.29-06-2002ந் திகதி இடம்பெற்ற இன வன்முறையின் போது பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களினதும் இழப்புகளினதும் விபரங்கள்

| பெயர் | வதியுமிடம் | இழப்பீட்டுப் பெறுமதி | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|---|
| 1.எம்.எம்.பாறுக் | வாழைச்சேனை | 962790.00 | சில்லறைக் கடை |
| 2.எஸ்.ஐ.பௌசுல் ஹமீட் | வாழைச்சேனை | 103008.00 | உணவு விடுதி |
| 3.ஏ.ஆர். நூறுல் அமீன் | வாழைச்சேனை | 214300.00 | கொமினிகேசன் |
| 4.எச்.எம். ஜிப்ரி | வாழைச்சேனை | 351000.00 | பலசரக்குக் கடை |
| 5.ஏ.சி.ஏ. றஸாக் | வாழைச்சேனை | 316118.00 | பலசரக்குக் கடை |
| 6.எம்.ஏ.சி.எஸ்.ஹப்ஸா | வாழைச்சேனை | 157680.00 | சிகை அலங்கார நிலையம் |
| 7.எம்.எம். அஹமட் | வாழைச்சேனை | 440000.00 | ஹாட்வெயார் |
| 8.எஸ்.எல்.சஹாப்தீன் | வாழைச்சேனை | 621529.00 | பலசரக்குக் கடை |
| 9.எம்.எஸ்.எம்.இஸ்ஹாக் | வாழைச்சேனை | 130315.00 | பலசரக்குக் கடை |
| 10.யு.எம். முஸம்மில் | வாழைச்சேனை | 97000.00 | சைக்கிள் திருத்துமிடம |
| 11.எஸ்.எல்.எம்.முஸ்தபா | வாழைச்சேனை | 108000.00 | ஹாட்வெயார் |
| 12.எம்.ஐ.எம்.நஸீர் | வாழைச்சேனை | 200000.00 | பலசரக்குக் கடை |
| 13எம்எம்அஹமது லெப்பை | வாழைச்சேனை | 162145.00 | ஹாட்வெயார் |
| 14.எல்.ரீ.எம்.பைஸல் | வாழைச்சேனை | 500000.00 | மின் உபகரணங்கள் கடை |
| 15.எஸ்.ஏ.அப்துல் லதீப் | வாழைச்சேனை | 463400.00 | புடவைக் கடை |
| 16.ஐ.எம். புஹாரி | வாழைச்சேனை | 144500.00 | பலசரக்குக் கடை |
| 17.எஸ்.எம். அன்ஸார் | வாழைச்சேனை | 150000.00 | சிகரட். பீடி |
| 18.ஏ.பி. றம்ளார் | வாழைச்சேனை | 774000.00 | கருவாட்டுக் கடை |
| 19.எம்.எஸ்.எச்.நஜிமுதீன் | வாழைச்சேனை | 84000.00 | பிரேம் போடும் கடை |
| 20.எம்.ஏ.எம்.புஹாரி | வாழைச்சேனை | 595000.00 | அரிசிக் கடை |
| 21.எஸ்.எம்.இப்றாகிம் | வாழைச்சேனை | 295000.00 | புடவைக் கடை |
| 22.ஏ.சி.எம். நௌபர் | வாழைச்சேனை | 68340.00 | அங்காடி வியாபாரம் |
| 23.ஏ.ஆர். நௌபர் | வாழைச்சேனை | 667800.00 | நகைக் கடை |
| 24. ரீ.கே. அனீம் | வாழைச்சேனை | 24000.00 | சைக்கிள திருத்துமிடம் |
| 25.ஏ.சி. அப்துல் றவு,ப் | வாழைச்சேனை | 90000.00 | கருவாட்டுக்கடை |
| 26.அப்துல் அஜீஸ் | வாழைச்சேனை | 165000.00 | பலசரக்குக் கடை |
| 27.ஏ.யு.சதக்கத்துல்லாஹ் | வாழைச்சேனை | 370180.00 | மிளகாய் அரைக்குமிடம் |
| 28.எச்.எம்.அப்துல் ஹமீட் | வாழைச்சேனை | 13580.00 | மரக்கறிக்கடை |
| 29.எம்.எஸ்.றபியுத்தீன் | வாழைச்சேனை | 410750.00 | நகைக் கடை |
| 30.எம்எஸ் இஸ்மான் அஹமட | வாழைச்சேனை | 137650.00 | அரைவை ஆலை |
| 31.ஏ.ஜி.அஹமட் சதக்கா | வாழைச்சேனை | 241000.00 | புடவைக் கடை |
| 32.எம்.எஸ்.எம்.அலியார் | வாழைச்சேனை | 240150.00 | பலசரக்குக் கடை |
| 33.எஸ்.எம். இப்றாஹிம் | வாழைச்சேனை | 29500.00 | புடவைக் கடை |
| 34.ஏ.பாறுக் | வாழைச்சேனை | 60900.00 | எலக்ரிகல் கடை |
| 35.எம்.ஏ.ஆதம்பாவா | வாழைச்சேனை | 25000.00 | இறைச்சிக் கடை |
| 36.எச்.எம்.அபூ பக்கர் | வாழைச்சேனை | 2375000.00 | பலசரக்குக் கடை |
| 37.எம்.எம்.ஐ. ஜிப்ரி | வாழைச்சேனை | 150000.00 | பென்சிகுட்ஸ் |
| 38.ஆர்.எம்.ஹாரிப் | வாழைச்சேனை | 89250.00 | பென்சிகுட்ஸ் |
| 39. ஏ.எல். சமூன் | வாழைச்சேனை | 1560000.00 | புடவைக் கடை |
| 40.எஸ்.எம். நாஸர் | வாழைச்சேனை | 920000.00 | பாதணி விற்கும் கடை |
| 41.என்.எம்.எம்.முகைதீன் | வாழைச்சேனை | 460750.00 | பாதணி விற்கும் கடை |
| 42.எம்.ஏ. அபுசாலி | வாழைச்சேனை | 650000.00 | பலசரக்குக் கடை |



படிப்பகம்

www.padippakam.com



| | | | |
|---|---|---|---|
| 43.யு.எல்.சிக்கிலந்தர் | வாழைச்சேனை | 175000.00 | கடிகாரக் கடை |
| 44.என்.எம்.எம்.முகைதீன் | வாழைச்சேனை | 965000.00 | புடவைக் கடை |
| 45.எஸ்.எம்.முபாறக் | வாழைச்சேனை | 385000.00 | பென்சிகுட்ஸ் |
| 46.கே.எம். றம்ஸில் | வாழைச்சேனை | 116582.00 | புடவைக் கடை |
| 47.எம்.ஏ.எம்.நியாஸ் | வாழைச்சேனை | 418500.00 | நகைக் கடை |
| 48.எம்.எம்.அலி அன்சார் | வாழைச்சேனை | 1453865.00 | புடவைக் கடை |
| 49.எஸ்.ஐ.கபீர் | வாழைச்சேனை | 438750.00 | பென்சிகுட்ஸ் |
| 50.பீ.எம். முஹம்மட் தம்பி | வாழைச்சேனை | 1004000.00 | பலசரக்குக் கடை |
| 51.ஐ. அஜ்மீர் ஹான் | வாழைச்சேனை | 659290.00 | பென்சிகுட்ஸ் |
| 52.எம்.லத்தீப் | வாழைச்சேனை | 245000.00 | கொமினிகேசன் |
| 53.யு.எம்.எம்.சுஹைப் | வாழைச்சேனை | 120000.00 | பலசரக்குக் கடை |
| 54.எம்.எம். அப்துல் கபூர் | வாழைச்சேனை | 50000.00 | பலசரக்குக் கடை |
| 55.ஐ.அமீர் ஹான் | வாழைச்சேனை | 108770.00 | உணவு விடுதி |
| 56.ஐ.எம். அலி | வாழைச்சேனை | 480000.00 | புடைவைக் கடை |
| 57.எஸ்.எம். முபாறக் | வாழைச்சேனை | 1150000.00 | புடைவைக் கடை |
| 58.எம்.ஐ.எம். லத்தீப் | வாழைச்சேனை | 42550.00 | இறைச்சிக் கடை |
| 60.எம்.எஸ்.சாலி முஹம்மட | வாழைச்சேனை | 2500.00 | தங்கம் முலாமிடல் |
| 61.ஏ.எல்.உ.சனார் | வாழைச்சேனை | 35000.00 | மரக்கறிக் கடை |
| 62.எம்.ஐ.ரசீட்ஹான் | வாழைச்சேனை | 550000.00 | பாதணி விற்கும் கடை |
| 63.ஜே. ராசிக் பரீட் | வாழைச்சேனை | 47000.00 | தையற் கடை |
| 64.எல்.ரீ.எம்.சறூக் | வாழைச்சேனை | 325000.00 | இலக்ரிகல் |
| 65.ஏ.பி.எம்.முபாறக் | வாழைச்சேனை | 150000.00 | அலுமினியக் கடை |
| 66.எம்.எம்.றம்ளார் | வாழைச்சேனை | 417625.00 | அரைவையாலை |
| 67.எம்.ஐ.செய்யதஹமது | வாழைச்சேனை | 37500.00 | ஹாட்வெயார் |
| 68.வை. இலவத்தம்பி | வாழைச்சேனை | 54000.00 | பைசிகள் திருத்துமிடம் |
| 69.எம்.ஐ.எம்.புஹாரி | வாழைச்சேனை | 231200.00 | உணவு விடுதி |
| 70.ஏ.சம்சுதீன் | வாழைச்சேனை | 169000.00 | பலசரக்குக் கடை |
| 71.ஏ.கபூர் இப்றாகிம் | வாழைச்சேனை | 223150.00 | தளபாடக் கடை |
| 72.எல்.ரீ.எம்.றபீக் | வாழைச்சேனை | 119925.00 | பென்சி ஹவுஸ் |
| 73.பீ.எம் நூர்தம்பி | வாழைச்சேனை | 179000.00 | கொமினிகேசன் |
| 74.யு.எல்.எம்.இத்ரீஸ் | வாழைச்சேனை | 40000.00 | அலங்காரப்பொருட்கள்... |
| 75.யு.எம். உவைஸ் | வாழைச்சேனை | 50200.00 | உணவு விடுதி |
| 76.எம்.எஸ்.உதுமாலெப்பை | வாழைச்சேனை | 261000.00 | பலசரக்குக் கடை |
| 77.ஏ.கே.எம்.முகைதீன் | வாழைச்சேனை | 210000.00 | பலசரக்குக் கடை |
| 78.ரி.எல்.எம். சாபி | வாழைச்சேனை | 418745.00 | புடவைக் கடை |
| 79.ஏ.எல்.ஏ.முகைதீன் | வாழைச்சேனை | 178000.00 | புடவைக் கடை |
| 80.ஏ.எம்.பதுர்தீன் | வாழைச்சேனை | 700000.00 | பலசரக்குக் கடை |
| 81.எம்.ஏ.எம்.லதீப் | வாழைச்சேனை | 30000.00 | சைக்கில் திருத்துமிடம் |
| 82.ஏ.எம்.முஸ்தபா | வாழைச்சேனை | 409787.00 | சைக்கில் திருத்துமிடம் |
| 83.எல்.ரீ.ஏ.நவாஸ் | வாழைச்சேனை | 199440.00 | மின்உபகரணங்கள் கடை |
| 84.ஏ.பி.எம். இப்றாகிம் | வாழைச்சேனை | 1200000.00 | வாகன உதிரிப்பாகக்கடை |
| 85.ஏ.எம்.தாஹிர் | வாழைச்சேனை | 337000.00 | புடவை வியாபாரம் |
| 86.எஸ்.எம்.ஜெனீபர் | வாழைச்சேனை | 69250.00 | அலங்காரப்பொருட்கள்... |
| 87.எம்.எஸ்.ஆதம்லெப்பை | வாழைச்சேனை | 1440000.00 | புடவைக் கடை |
| 88.பீ.எம்.அப்துல் ஜப்பார் | வாழைச்சேனை | 275500.00 | கட்டிடப்பொருட்கள்... |
| 89.ஏ.எல்.எம்.அலியார் | வாழைச்சேனை | 185000.00 | வெற்றிலைக் கடை |
| 90.எஸ்.எம்.உசனார் | வாழைச்சேனை | 42300.00 | பலசரக்குக் கடை |
| 91.எஸ்.ஜே.ஜவாத் | வாழைச்சேனை | 765000.00 | தளபாடக் கடை |



படிப்பகம்

www.padippakam.com



| | | | |
|---|---|---|---|
| 92.என்எம்முஹம்மது தம்பி | வாழைச்சேனை | 187000.00 | பலசரக்குக் கடை |
| 93.யு.எல்.நௌபல் | வாழைச்சேனை | 763500.00 | பலசரக்குக் கடை |
| 94.யூ .எல்.எம்.தாஹா | வாழைச்சேனை | 240402.00 | மரக்கறிக் கடை |
| 95.எம்.எம்.ஜௌபர் | வாழைச்சேனை | 31625.00 | மீன் வியாபாரம் |
| 96.ஏ. முஹம்மது அலியார் | வாழைச்சேனை | 18211.00 | பலசரக்குக் கடை |
| 97.எம்எல்அஹமது முஸ்தபா | வாழைச்சேனை | 75000.00 | பலசரக்குக் கடை |
| 98.ஏ.எல்.அன்வர் | வாழைச்சேனை | 90000.00 | அரைக்கும் ஆலை |
| 99.எஸ்.எல்.இலவத்தம்பி | வாழைச்சேனை | 150000.00 | மீன் வியாபாரம் |
| 100.எஸ்.ஏ.சி.எம்.சாலிஹ் | வாழைச்சேனை | 408700.00 | தளபாடப்பொருட்கள்... |
| 101.எம்.ஏ.அப்துல் சத்தார் | வாழைச்சேனை | 20820.00 | பல சரக்குக்கடை |
| 102.எம்.பி.எம்.அப்பாஸ் | வாழைச்சேனை | 370000.00 | நாடான் கடை |
| 103.எம்.எம்.றஹ்மான் | வாழைச்சேனை | 200000.00 | பலசரக்குக் கடை |
| 104.எஸ்மை.எச்.முஹம்மது | வாழைச்சேனை | 40000.00 | உணவு விடுதி |
| 105.எம்.ஏ.அலி அக்பர் | வாழைச்சேனை | 103000.00 | வெற்றிலைக் கடை |
| 106.எம்.எஸ்.தௌபீக் | வாழைச்சேனை | 275000.00 | பல சரக்குக்கடை |
| 107.எம்.ரீ.எம்.நகீப் | வாழைச்சேனை | 275615.00 | உணவு விடுதி |
| 108.எம்.எல்.இலவத்தம்பி | ஓட்டமாவடி | 92400.00 | தையற் கடை |
| 109.எம்.எம்.அன்வர் | ஓட்டமாவடி | 198000.00 | பல சரக்குக்கடை |
| 110.எம்.ஏ.சேகுஇஸ்மாயில் | ஓட்டமாவடி | 50500.00 | மரக்கறிக்கடை |
| 111.ஏ.எல்.ஏ.ஜப்பார் | ஓட்டமாவடி | 56090.00 | உணவு விடுதி |
| 112.ஏ.எம்.ஜஃபர் | ஓட்டமாவடி | 130000.00 | புடவைக்கடை |
| 113.எஸ்.எம்.யாஸார் | ஓட்டமாவடி | 79954.00 | மரக்கறிக்கடை |
| 114.ஏ.கமால்தீன் | செம்மணோடை | 204000.00 | பலசரக்குக் கடை |
| 115.ஏ.எம்.ஜஃபர் | பிறைந்/சேனை | 83000.00 | பல சரக்குக் கடை |
| 116.ஏ.சி.எம்.மன்சூர் | பிறைந்/சேனை | 150000.00 | பென்சிகுட்ஸ் |
| 117.எம்.ஐ.கலந்தர்லெப்பை | பிறைந்/சேனை | 175000.00 | அலுமினியப் பொருட்கள்... |
| 118.ஜே.எம்.சித்தீக் | பிறைந்/சேனை | 196001.00 | மரக்கறிக் கடை |
| 118.ஏ.பீர்முஹம்மட் | மாவடிச்சேனை | 57000.00 | தேங்காய்க் கடை |
| 119.எம்.எல்.உமர்லெப்பை | வாழைச்சேனை | 150000.00 | பலசரக்குக் கடை |
| 120.ஏ.யு.ஜஃபர் | வாழைச்சேனை | 250000.00 | புடவை வியாபாரம் |
| 121.ஏ.எச்.றபீக் | வாழைச்சேனை | 20500.00 | குளிர்பான சாலை |
| 122.எம்.ஆதம்லெப்பை | வாழைச்சேனை | 247370.00 | உணவு விடுதி |
| 123.ஏ.எல்.உதுமாலெப்பை | வாழைச்சேனை | 12500.00 | வீட்டுப்பாவனைப்பொருட்கள் |
| 124.எம்.என்.அப்துல் காதர் | வாழைச்சேனை | 1804740.00 | புடவைக்கடை |
| 125.ஏ.எல்.மீராசாய்வு | வாழைச்சேனை | 68675.00 | புடவைக்கடை |
| 126.ஏ.எம்.எம்.சரீப் | வாழைச்சேனை | 208180.00 | பென்சிகுட்ஸ் |
| 127.ஏ.சி.எம்.அப்துல் காதர் | வாழைச்சேனை | 309596.00 | சில்லறைக்கடை |
| 128.எம்.எம்.ஹனீபா | வாழைச்சேனை | 2061085.00 | பல சரக்குக்கடை |
| 129.என்.எல்.எம்.இஸ்ஸத் | வாழைச்சேனை | 745000.00 | சில்வர் பொருட்கள் கடை |
| 130.ஏ.எம்.ஜபறுல்லாஹ் | வாழைச்சேனை | 203250.00 | அரைக்கும் ஆலை |
| 131.ஜே. முபாறக் | வாழைச்சேனை | 766000.00 | பலசரக்குக் கடை |
| 132.ஏ.எம்.அஹமது லெப்பை | வாழைச்சேனை | 165000.00 | போட்டோ கொப்பிக் கடை |
| 133.எம்.எம்.அமீர் | வாழைச்சேனை | 1103815.00 | கருவாட்டுக் கடை |
| 134.எஸ்.எம்.நாஸர் | வாழைச்சேனை | 255000.00 | குளிர்பானக் கடை |
| 136.எம்.எம்.பாறூக் | வாழைச்சேனை | 558000.00 | வெற்றிலைக் கடை |
| 137.எஸ்.எம். பாயிஸ் | வாழைச்சேனை | 2900000.00 | நகைக் கடை |
| 138.எம்.எம்.நிப்றாஸ் | வாழைச்சேனை | 113200.00 | அங்காடி வியாபாரம் |
| 139.எம்.எஸ்.எம்.ஹுஸைன் | வாழைச்சேனை | 872558.00 | பலசரக்குக் கடை |



படிப்பகம்

www.padippakam.com



| | | | |
|---|---|---|---|
| 140.ஜமால்தீன் பஷீர் | வாழைச்சேனை | 28800.00 | மரக்கறிக் கடை |
| 141.ஏ.எம்.எம். கபீர் | வாழைச்சேனை | 1801500.00 | புடைவைக் கடை |
| 142.எம்.ரி.மசூத் | வாழைச்சேனை | 497000.00 | பல சரக்குக் கடை |
| 143.எம்.எல்.எம். கலீல் | வாழைச்சேனை | 67000.00 | சில்வர்க் கடை |
| 144.எல்.ரீ.எம்.நளீம் | வாழைச்சேனை | 250000.00 | பல சரக்குக் கடை |
| 145.ஐ.எல்.ஹாஜா முகைதீன | வாழைச்சேனை | 568301.00 | பல சரக்குக் கடை |
| 146.பி.ரீ.ஏ. அஸீஸ் | வாழைச்சேனை | 144200.00 | அலங்காரப்பொருட்கள் |
| 147.எம்.ஏ.எம்.ஹஸன் | வாழைச்சேனை | 195500.00 | மரக்கறிக்கடை |
| 148.எம்.எஸ்.இஸ்ஸதீன் | வாழைச்சேனை | 202800.00 | பழக்கடை |
| 149.ஏ.எம்.எம். இர்பான் | வாழைச்சேனை | 42000.00 | அங்காடி வியாபாரம் |
| 150.யு.எம். இப்றாஹிம் | வாழைச்சேனை | 30000.00 | பைசிககில் திருத்துமிடம் |
| 151.எம்.எஸ்.எம். அலியார் | வாழைச்சேனை | 1425000.00 | புடவைக் கடை |
| 152.எம்.எம்.தம்பி | வாழைச்சேனை | 253000.00 | தையல் கடை |
| 153.ஏ.எம். ஐனுதீன் | வாழைச்சேனை | 43700.00 | அங்காடி வியாபாரம் |
| 154.ஆர். மாலிக் | வாழைச்சேனை | 149700.00 | நகைக் கடை |
| 155.எம்.ஐ.எம்.சித்தீக் | வாழைச்சேனை | 600000.00 | உணவகம் |
| 156.எம்.ஐ.ஜமால்தீன் | வாழைச்சேனை | 41890.00 | மரக்கறிக் கடை |
| 157.எம்.எம்.எம்.தௌபீக் | வாழைச்சேனை | 997580.00 | நகைக் கடை |
| 158.ஏ. சம்சுதீன் | வாழைச்சேனை | 1200000.00 | பலசரக்குக் கடை |
| 159.எஸ்.எம்.ஜெமீல் | வாழைச்சேனை | 2150000.00 | புடவைக் கடை |
| 160.என்.எம்.நகீர் | வாழைச்சேனை | 52335.00 | அங்காடி வியாபாரம் |
| 161. எம்.ஐ. இஸ்மாயில் | வாழைச்சேனை | 165325.00 | மல்டி சென்றர் |
| 162.எம்.கே.இஸ்மாயில் | வாழைச்சேனை | 300000.00 | ஹார்ட்வெயார் |
| 163.எம்.எல்.அப்துல் கரீம் | வாழைச்சேனை | 1300000.00 | பலசரக்குக் கடை |
| 164.ஏ.எல்.எம்.அப்துல் காதர் | வாழைச்சேனை | 309596.00 | பலசரக்குக் கடை |
| 165.ரீ.எல்.எம்.சாபி | வாழைச்சேனை | 216100.00 | புடவைக் கடை |
| 166.எஸ்.எம்.ஹனீபா | வாழைச்சேனை | 2218475.00 | நகைக் கடை |
| 167.ஏ.எஸ்.ஜஃபர் | வாழைச்சேனை | 686975.00 | நகைக் கடை |
| 168.எம்.ஏ.எம்.றஹ்மான் | வாழைச்சேனை | 337900.00 | பலசரக்குக் கடை |
| 169.பி.ரீ.எம்.சுபைர் | வாழைச்சேனை | 183000.00 | பலசரக்குக் கடை |
| 170.ஏ.எல்.ஹச்சிமுஹம்மட் | வாழைச்சேனை | 164825.00 | புடவை வியாபாரம் |
| 171.ஏ.எல்.எம்.மக்கீன் | வாழைச்சேனை | 148000.00 | அங்காடி வியாபாரம் |
| 172.ஏ.எம்.சுபியான் | வாழைச்சேனை | 27000.00 | அங்காடி வியாபாரம் |
| 173.எஸ்.எச்.எம்.நளீம்தீன் | வாழைச்சேனை | 53165.00 | அலுமினியப் பொருட்கள்... |
| 174.ஏ.சி.எம்.நிஜாம்தீன் | வாழைச்சேனை | 1710000.00 | பல சரக்குக் கடை |
| 175.எம்.சி.றபீக் | வாழைச்சேனை | 39500.00 | அங்காடி வியாபாரம் |
| 176.எம்.யு.எம்.முஸ்தபா | வாழைச்சேனை | 45000.00 | குளிர்பானக் கடை |
| 177.எம்.எம்.இஸ்மாயில் | வாழைச்சேனை | 130000.00 | பலசரக்குக் கடை |
| 178.எஸ்.ஏ.பத்தாஹ் | வாழைச்சேனை | 1065000.00 | பலசரக்குக் கடை |
| 179.ஐ.என்.முஹம்மட் | வாழைச்சேனை | 380000.00 | கருவாட்டுக் கடை |
| 180.யு.எம்.முஸம்மில் | வாழைச்சேனை | 95000.00 | சைக்கிள் திருத்துமிடம் |
| 181.என்.பி.முஹம்மது சரீப் | வாழைச்சேனை | 794000.00 | உணவகம் |
| 182.எஸ்.ஏ.நூர்முஹம்மட் | வாழைச்சேனை | 42500.00 | இறைச்சிக் கடை |
| 183.எச்.எம்.எம்.றபீக் | வாழைச்சேனை | 9350000.00 | அலங்காரப் பொருட்கள் |
| 184.ஏ.யு.முஹம்மது தம்பி | வாழைச்சேனை | 723031.00 | உணவகம். |
| 185.எஸ்.எச்.சாகிர்ஹுசைன் | வாழைச்சேனை | 75000.00 | உணவகம் |
| 186.ஐ.எல்.மீராலெப்பை | வாழைச்சேனை | 347437.00 | உணவகம் |
| 186.எச்.எம்.பாகிர் தம்பி | வாழைச்சேனை | 109900.00 | மரக்கறிக்கடை |
| 187.எம்.பி.எம்.நௌஸார் | வாழைச்சேனை | 120000.00 | அங்காடி வியாபாரம் |



படிப்பகம்

www.padippakam.com



| | | | |
|---|---|---|---|
| 188.எம்.எம்.இஸ்மாயில் | வாழைச்சேனை | 75500.00 | குளிர்பானக் கடை |
| 189.எஸ்.எம்.நூர்முகம்மட் | வாழைச்சேனை | 18000.00 | சிறுகடை |
| 190.ஏ.பாத்தும்மா | வாழைச்சேனை | 600000.00 | பலசரக்குக் கடை |
| 191.ஏ.அஹமது லெப்பை | வாழைச்சேனை | 98750.00 | கருவாட்டுக்கடை |
| 192.ஏ.ஜே.எம்.முயீஸ் | வாழைச்சேனை | 520180.00 | கொமியுனிகேசன் |
| 193.எம்.எல்.எம்.இஸ்மாயில் | வாழைச்சேனை | 40000.00 | குளிர்பானக்கடை |
| 194.ஜே.எம்.தாஜுதீன் | வாழைச்சேனை | 112295.00 | மரக்கறிக்கடை |
| 195.எம்.பி.பௌசுதீன் | வாழைச்சேனை | 7800.00 | குளிர்பானக் கடை |
| 196.எம்.எச்.றவ்பா | வாழைச்சேனை | 350000.00 | கட்டிடக் கடை |
| 197.ஏ.எம்.இக்பால் | வாழைச்சேனை | 15000.00 | குளிர்பானக் கடை |
| 198.செட்.எம்.ஹஸன் | வாழைச்சேனை | 110000.00 | அங்காடி வியாபாரம் |
| 199.எம்.எச்.றவ்பா | வாழைச்சேனை | 6600000.00 | தளபாடக் கடை |
| 200.ஏ.எல்.எம்.ஹனீபா | வாழைச்சேனை | 381732.00 | சில்லறைக் கடை |
| 201.ஏ.பௌறூஸ் | வாழைச்சேனை | 63000.00 | மரக்கறிக் கடை |
| 202.எம்.எச்.றவு,ஸ்தீன் | வாழைச்சேனை | 927600.00 | ஹாட்வெயார் |
| 203.எம்.எஸ்.எல்.சேகுஅலி | வாழைச்சேனை | 60600.00 | சில்லறைக் கடை |
| 204.எச்.முஹம்மட் | வாழைச்சேனை | 1030000.00 | புடவைக்கடை |
| 205.எம்.ஏ.எல்.ஏ.ஜெஸீர் | வாழைச்சேனை | 15000.00 | அங்காடி வியாபாரம் |
| 206.எப்.நெய்னா முஹம்மட் | வாழைச்சேனை | 380000.00 | கருவாட்டுக் கடை |
| 207.டீ.ரீ.எம்.புகாரி | வாழைச்சேனை | 115000.00 | கட்டடம் குத்தகை |
| 208.என்.எம்.எம்.உசன் | ஓட்டமாவடி | 115500.00 | மரக்கறிக் கடை |
| 209.எம்.ஏ.எம்.றகுமான் | ஓட்டமாவடி | 199500.00 | மரக்கறிக் கடை |
| 210.எம்.ஏ.எம்.முஸ்தபா | ஓட்டமாவடி | 425000.00 | சில்லறைக் கடை |
| 211.எம்.எஸ்.ஜெய்னுதீன் | ஓட்டமாவடி | 225800.00 | மரக்கறிக் கடை |
| 212.என்எல்எம்அப்துல் காதர் | ஓட்டமாவடி | 164000.00 | மரக்கறிக் கடை |
| 213.எம்.சி.எம்.பாயிஸ் | ஓட்டமாவடி | 36120.00 | அங்காடி வியாபாரம் |
| 214.எம்.எல்.சாஹுல்ஹமீட் | ஓட்டமாவடி | 75000.00 | பலசரக்குக் கடை |
| 215.எம்.எச்.சபீக் | ஓட்டமாவடி | 40000.00 | அலங்காரப்பொருட்கள் |
| 216.எம்.எல்.எம்.சபீக் | ஓட்டமாவடி | 190000.00 | மரக்கறிக் கடை |
| 217.ஏ.எல்.ஹச்சிமுஹம்மட் | ஓட்டமாவடி | 144000.00 | மரக்கறிக் கடை |
| 218.பி.எம்.எம்.ஹனீபா | ஓட்டமாவடி | 104000.00 | தேங்காய்க் கடை |
| 219.எம்.ஐ.எம்.இப்றாகிம் | ஓட்டமாவடி | 360875.00 | அங்காடி வியாபாரம் |
| 220.எம்.ஏ.எம்.ஹஸன் | ஓட்டமாவடி | 195500.00 | மரக்கறிக் கடை |
| 221.எம்.யு.எம்.றபீக் | ஓட்டமாவடி | 143000.00 | மரக்கறிக் கடை |
| 222.எம்.ஏ.ஏ.றஹ்மான் | ஓட்டமாவடி | 199500.00 | மரக்கறிக் கடை |
| 223.எம்.எம்.உசன் | ஓட்டமாவடி | 115500.00 | மரக்கறிக் கடை |
| 224.எம்.எஸ்.வெள்ளத்தம்பி | மாவடிச்சேனை | 98000.00 | மின்சார உபகரணங்கள் கடை |
| 226.யு.எம்.றிஸ்வான் | பிறைந்/சேனை | 227100.00 | புடவைக் கடை |
| 227.எம்.எம்.அலிஅக்பர் | மீராவோடை | 480000.00 | புடவைக்கடை |
| 228.ஐ.எல்.எம்.றியாஸ் | மீராவோடை | 49000.00 | அங்காடி வியாபாரம் |
| 229.யு.எல்.அலிஅக்பர் | செம்மணோடை | 94050.00 | குளிர்பானக் கடை |
| 230.எம்.சி.ஜவாத் | பிறைந்/சேனை | 982200.00 | தையற் கடை |
| 231.பி. நஸீர் | பிறைந்/சேனை | 29455.00 | பாதணி விற்கும் கடை |
| 232.எச்.எம்.யாக்கூப் | பிறைந்/சேனை | 115000.00 | புடவைக் கடை |
| 233.ஏ.எல்.அன்ஸார் | பிறைந்/சேனை | 36120.00 | புடவைக் கடை |
| 234.எம்.எம்.ஜுனைதீன் | பிறைந்/சேனை | 24700.00 | பலசரக்குக் கடை |
| 235.எம்.பி.மஃரூட்லெப்பை | பிறைந்/சேனை | 64000.00 | கருவாட்டுக் கடை |
| 236.கே.முபாரக் | பிறைந்/சேனை | 603000.00 | பலசரக்குக் கடை |



படிப்பகம்

www.padippakam.com



## VALLAM (FISHING SMALL BOAT) TAKEN BY TERRORIST (DUE TO ETHNIC VIOLENCE ON 27TH JUNE 2002)

| NO | NAMES | RESIDENT | TAKEN PLACE | AMOUNT |
|---|---|---|---|---|
| 01 | A.B.ILYAS | MEERAVODAI | VAKANARY | 8500.00 |
| 02 | R.MEERA SAHIB | MEERAVODAI | VAKANARY | 9000.00 |
| 03 | U.HABIB LEBBE | MEERAVODAI | VAKANARY | 8500.00 |
| 04 | K.M.NAZEER | MEERAVODAI | VAKANARY | 9000.00 |
| 05 | U.HANIFFA | ODDAMAVADI | VAKANARY | 8000.00 |
| 06 | U.M.BUHARY | ODDAMAVADI | VAKANARY | 9000.00 |
| 07 | M.K.BUHARY | KAWATHAMUNI | VAKANARY | 9000.00 |
| 08 | H.ASANAR | KAWATHAMUNI | VAKANARY | 8500.00 |
| 09 | A.B.ASNAR | KAWATHAMUNI | VAKANARY | 8500.00 |
| 10 | M.A.MOHIDEEN BAWA | KAWATHAMUNI | VAKANARY | 8500.00 |
| 11 | M.MOHAMED THAMBY | KAWATHAMUNI | VAKANARY | 8500.00 |
| 12 | M.L.IBRAHIM | KAWATHAMUNI | VAKANARY | 8500.00 |
| 13 | B.C.SHARIFF | KAWATHAMUNI | VAKANARY | 9000.00 |
| 14 | A.M.SAFEEK | KAWATHAMUNI | VAKANARY | 8500.00 |

## REFUGEES INFORMATION OF KERNI NAGAR (KORALAI PATTU CENTRAL VALAICHCHENAI)

| S.NO | NAME | FAMILY MEMBERS |
|---|---|---|
| 1 | M.K.KATHIJA UMMAH | 5 |
| 2 | A.R.KATHIJA UMMAH | 5 |
| 3 | M.L.FAROOK | 5 |
| 4 | ALLAH PICHCHAI SUBAIR | 6 |
| 5 | M.F.SAKINA UMMAH | 4 |
| 6 | J.D.SIRAJDEEN | 4 |
| 7 | K.M.NAUFER | 3 |
| 8 | A.B.FAREENA UMMAH | 4 |
| 9 | N.NAJEEMA | 6 |
| 10 | A.B.SITHI JASEEMA | 5 |
| 11 | M.S.MEERA SAHIB | 4 |



படிப்பகம்

www.padippakam.com




# இரங்கற்பா

சென்று திரும்பா என் நண்பனின் கதையை
எமது மண்ணிலே
துயருடன் அவர்கள் கூறுகின்றனர்

அவனது பெயர்....?

அவனது பெயரைக் குறிப்பிட வேண்டாம்
எம் இதயங்களில் அச்சொல்
புனிதமாய் இருக்கட்டும்.
சாம்பலைப் போல் காற்று அதனையும்
அள்ளிச் செல்ல விடவேண்டாம்.

சுகப்படுத்த முடியாத ஒரு காயமாக
அவனை எங்கள் இதயத்தில் இருத்துவோம்.
அன்புள்ளோரே
அனாதைகளே
நான் விசாரப்படுகிறேன்
அநேக பெயர்களுள்
அவனது பெயரை மறந்துவிடுவோம்
என்று அஞ்சுகிறேன்
அவனை மறக்க நான் அஞ்சுகிறேன்
மாரி மழையிலும் புயலிலும்
எம் இதயக் காயங்கள் உறங்குதல் கூடும்
என நான் அஞ்சுகிறேன்.



அவனது வயது....?
மழையை நினைவு கூரா ஓர் அரும்பு அவன்
நிலவொளியில் காதல் பாட்டுப் பாடியதில்லை அவன்
காதலிக்காக காத்திருந்து
கடிகாரத்தை நிறுத்தியதில்லை அவன்
அவனது கரங்கள் சுவரருகே யாரையும் தழுவியதில்லை
ஓர் உந்தும் வேட்கையை
அவன் விழிகள் என்றும் தொடர்ந்ததில்லை
அவன் ஒரு பெண்ணை முத்தமிட்டதேயில்லை
ஒருத்தியுடனும் சல்லாபித்ததுமில்லை
அவனது வாழ்வில் இருமுறை மட்டுமே
ஒரு பெண்ணைப் பார்த்து ஆ ! என வியந்தான்
ஆனால் அவளோ அவனைப் பொருட்படுத்தியதில்லை
அவனோ முதிரா இளைஞன்
அவளை அடையும் வழியை அவன் இழந்தான்
நம்பிக்கையையும் அதுபோல இழந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



எங்கள் மண்ணிலே
அவனது கதையைக் கூறுகின்றனர்
அவன் ஓடி மறைந்த போது
அவனது தாயிடம் விடைபெறவில்லை
நண்பர்களைச் சந்திக்க வில்லை.

அச்சத்தைத் தணிக்கும் செய்தி எதனையும்
விட்டுச் செல்லவில்லை
வழிபார்த்திருக்கும் அவனது தாயின்
நீண்ட இரவுக்கு விளக்கேற்றும்
ஓர் சொல்லைத்தானும் அவன் கூறிச்செல்லவில்லை
அவனது தாயே ஆகாயத்தோடும்
அவனது தலையணை அவனது பெட்டி
என்பவற்றோடுமே பேசுகின்றாள்

அவள் தன் துயர் நிலையில் அரற்றுவாள் :
இரவே
நட்சத்திரங்களே
கடவுளே
முகில்களே
பறந்து செல்லும் என் பறவையைக் கண்டீர்களா?
சுடரும் இரு தாரகை அவனது கண்கள்
இரண்டு பூக் கூடைகள் அவனது கரங்கள்
அவனது மார்பு
நிலவுக்கும் நட்சத்திரங்களுக்கும்
தலையணை யாகும்
காற்றும் மலரும் ஆடும் ஊஞ்சல் அவனது கேசம்
பிரயாணத்துக்கு இன்னும் தகுதி பெறாத
பிரயாணியைக் கண்டீர்களா?
உணவு எடுத்துக் கொள்ளாது அவன் சென்று விட்டான்
பசி வரும்போது அவனுக்கு யார் உணவளிப்பர்?
அன்னியனான அவனுக்கு வீதி அனர்த்தங்களில்
யார் அனுதாபம் காட்டுவர்?
என் மகன்
என் மகன்

இரவே தாரகைகளே தெருக்களே முகில்களே
அவளுக்குச் சொல்லுங்கள்:
எம்மிடம் விடையில்லை
கண்ணீரை சோகத்தை கஷ்டங்களை விட
பெரியது காயம்
உண்மையை நீ தாங்கமாட்டாய்
ஏனெனில்
உனது மகன் இறந்து விட்டான்
தாயே கண்ணீரை முடித்து விடாதே
கண்ணீருக்கு தேவை இருப்பதால்
ஒவ்வொரு மாலை நேரத்துக்கும்
அதில் கொஞ்சம் வைத்திரு



படிப்பகம்

www.padippakam.com



மரணத்தினால் பாதைகள் நெரிசலடையும் போது
உன் மகன் போன்ற பிரயாணிகளால்
அவை மறிக்கப்படுகின்றன
நீ உன் கண்ணீரைத் துடைத்து
முன்னர் இறந்த அன்புக்குரிய அகதிகளின்
நினைவுச் சின்னங்களாக
எமது கண்ணீரில் சிறிதை எடுத்துக் கொள்வாய்.

உனது கண்ணீரை முடித்துவிடாதே
பாத்திரத்தில் சிறிது கண்ணீரை வைத்திரு
சில வேளை நாளை அவனது தகப்பனுக்காக
அல்லது அவனது சகோதரனுக்காக
அல்லது அவனது நண்பன் எனக்காக
நாளைக்கு எங்களுக்காக
இரு துளிக் கண்ணீரை வைத்திரு

எனது நண்பனைப் பற்றி
எனது மண்ணிலே அதிகம் பேசுகின்றனர்
எப்படி அவன் சென்றான்?
எப்படி அவன் திரும்பவே இல்லை?
எப்படி அவன் தன் இளமையை இழந்தான்?

துப்பாக்கி வேட்டுகள்
அவன் மார்பையும் முகத்தையும் நொறுக்கின
தயவு செய்து மேலும் விவரணம் வேண்டாம்
நான் அவனது காயங்களைப் பார்த்தேன்
அதன் பரிமாணங்களைப் பார்த்தேன்
நான் நமது ஏனைய குழந்தைகளைப் பற்றி எண்ணுகிறேன்
குழந்தையை இடுப்பில் ஏந்திய
ஒவ்வொரு தாயையும் பற்றி எண்ணுகிறேன்

அன்புள்ள நண்பனே
அவன் எப்போது வருவான் என்று கேட்காதே
மக்கள் எப்போது கிளர்ந்தெழுவார்கள்
என்று மட்டும் கேள்.

~ மஹ்மூட் தர்வீஷ் ~
(பலஸ்தீனக் கவிஞர்)





படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கொலைக்கரத்தின் வடுக்கள் உயிர்களை மட்டுமல்ல உடமைகளையும் அழித்தது...



படிப்பகம்